வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959    Reg. No. : P . 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com    மலர் : 05    11.01.2024 வியாழக்கிழமை    இதழ் : 11    பக்கங்கள் : 12

# போட்டியின்றி தமிழரசுக்கு தலைவர் 3 போட்டியாளர்களின் முடிவும் இன்று!





கொழும்பு, ஜனவரி 11

**இலங்கை தமிழரசு கட்சியின் பாரம்பரியத்தின்படி தேர்தல் இன்றி கட்சியின் தலைவரை தெரிவு செய்வது தொடர்பில் போட்டியாளர்கள் மூவரும் இன்று வியாழக்கிழமை தமக்குள் கலந்து பேசி முடிவு எடுத்து கட்சிக்கு அறிவிப்பர் என்று தெரிவிக்கப்பட்டது.**


இலங்கைத் தமிழரசு கட்சியின் செயல்குழு கூட்டம் கட்சியின் பெருந் தலைவர் சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நேற்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற் றது.

இதன்போது, திரு கோணமலை கிளையில் இடம்பெற்ற நிர்வாக தெரிவு முறைகேடு தொடர்பிலும் பேசப்பட் டது. நிர்வாகத்தில் இடம்பெறாத 6 உறுப்பினர்களை யும் பொதுக் குழு

11

## டெங்கு அதிதீவிரமடைந்த மாவட்டமாக யாழ்ப்பாணம்

*யாழ்ப்பாணம், ஜன. 11*



நாட்டில் டெங்கு தொற்று அதி தீவிர நோய் நிலை மாவட்டமாக யாழ்ப்பாணம் தரப்படுத்தப்பட் டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித் துள்ளது.

டெங்கு கட்டுப்பாட் டுப் பிரிவின் தகவல்களின் அடிப் படையில், கடந்த 8ஆம் திகதி வரை எட்டு நாள்களில் யாழ்ப்பாணத் தில் 448 பேர் டெங்கு தொற்றுடன் அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர்.

நாட்டில் இந்த வருடம் மாவட்ட அடிப் படையில் அதிக டெங்கு தொற்றாளர்கள் பதிவான மாவட்டமாக யாழ்ப்பாணமே

11

## தென்கிழக்கு பல்கலை. மூடப்பட்டது

*கல்முனை, ஜன. 06*

சீரற்ற காலநிலை மற் றும் வெள்ளத்தால் தென்கிழக்கு பல்கலைக் கழக ஒலுவில் வளாகத் தின் அனைத்து கல்வி நட வடிக்கைகளும் எதிர் வரும் 16ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டதாக துணைவேந்தர் பேராசிரி யர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்துள்ளார்

தற்போதைய கால நிலை முன்னறிவிப்புக ளால் ஏற்படக்கூடிய சாத் தியமான ஆபத்துகளை கவனமாக ஆராய்ந்த பிறகு பல்கலைக்கழகத் தின் மூத்த ஆலோசனைக் குழு இந்த முடிவை எடுத் துள்ளது.

வெள்ளத்தால், விடுதியில் தங்கி யுள்ள மாணவர்கள்

11



உலக தமிழராய்ச்சி மாநாட்டில் பொலிஸாரின் வன்முறையில் கொல்லப்பட்டவர்களின் 50ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று நடைபெற்ற தருணம்.!

(செய்தி பக்கம் 12இல்)

## 90 கிலோ கேரள கஞ்சாவுடன் உரும்பிராயில் ஒருவர் கைது!

*யாழ்ப்பாணம், ஜன. 11*

உரும்பிராயில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட் டிருந்த 90 கிலோ கேரள கஞ்சா போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவ லின் அடிப்படையில் குறித்த வீட்டை விசேட அதிரடிப் படையினர் நேற்று சோதனையிட்டனர்.

இதன்போது, 35 பொதிகளில் இருந்த சுமார் 90 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது. வீட்டில் இருந்தவரும் கைது செய்யப்பட்டார்.

11



## மட்டக்களப்பில் கனமழை; 5,461 குடும்பங்கள் பாதிப்பு!

*மட்டக்களப்பு, ஜன. 11*

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடைமழையால் 5,461 குடும்பங்களை சேர்ந்த 17531பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மட் டக்களப்பு மாவட்ட அனர்த்தமுகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று வரை தொடர்ச்சியாக மூன்நாட்கள் கனமழை பெய்து வரு கின்றது. இந்த மழையால் பெருவெள்ளம் ஏற்பட்டுள் ளது. இதனால், பல கிராமங்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மட்டக்களப்பு - கொழும்பு வீதியில் மன்னம்பிட்டியில் பெருவெள்ளம்

11

## ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர் ரணிலே!

### ஐ. தே. க. ஏகமனதாக முடிவு

*கொழும்பு, ஜன. 11*

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை முன்னிறுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயல்குழு ஏகமனதாக தீர்மானித்துள் ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில்

11

## பிரிட்டன் இளவரசி ஆன் நேற்று இலங்கை வந்தார்!



*கொழும்பு, ஜன. 11*

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற் கொண்டு பிரித்தானிய இளவரசி ஆன் நாட்டுக்கு வருகை தந்துள்ளார்.

இளவரசி ஆன், அவருடைய கணவர் வைஸ் அட் மிரல் சேர் திமொதி லோரன்ஸுடன் நேற்று புதன் கிழமை நண்பகல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலை யத்தை வந்தடைந்தார்.

அவர்களுக்கு பாரம்பரிய நடன நிகழ்ச்சிகளுடன் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து இளவரசி ஆன் விருந்தினர் அபிப்பிராயப் புத்தகத்தில் கையெழுத்திட்டார். (ஐ)

## சுகாதார உத்தியோகத்தர்களின் வேலைநிறுத்தம் இன்றும் தொடரும்!

### பொதுமக்கள் பெரும் அசௌகரியம்

*யாழ்ப்பாணம், ஜன. 11*

மருத்துவர்களுக்கு மாத்திரம் 35 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மருத்துவமனை நிர்வாக அதிகாரிகள் மற்றும் கனிஷ்ட நிலை சுகாதார ஊழியர்கள் இணைந்து நாடு முழுவதும் நேற்று முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் இன்றும் தொடரும் என்று சுகாதார தொழிற்சங் கங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றைய தினம் தொடர்ந்த பணிப்

11

## பருத்தித்துறையில் நேற்று வாள்வெட்டு!

*வடமராட்சி, ஜன. 11*

பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் வைத்து தனி யார் பேருந்து சாரதி மீது நேற்று புதன்கிழமை அதி காலை வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது.

இதில், பருத்தித்துறையில் இருந்து கட்டைக் காட்டுக்கான சேவையில் ஈடுபடும் பேருந்தின்

11

# இப்படியும் நடக்கிறது

தமிழரசு கட்சியின் பெருந்தலைவர் என்று இப்போது பதவியை சுருக்கிக்கொண்ட போதிலும் அவரே இப்போதும் தமிழர் தலைவர் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்காது.

முன்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக இருந்தபோது அதன் தலைவராக இருந்த அவர், கூட்டமைப்பிலிருந்து தமிழரசு வெளியேறிய பின்னர், ஊடகங்கள் அவரை தமிழரசின் பெருந்தலைவர் ஆக்கினார்கள். கூட்டமைப்பு என்று ஒன்று இருந்திருக்காவிட்டால் அவர்தான் இப்போதும் தமிழரசின் தலைவராக இருந்திருப்பாரோ தெரியவில்லை.

அவர் நீண்டகாலம் பாராளுமன்றம் செல்லாமல் இருந்ததை ஒரு சிங்கள ஊடகம் கேள்விக்கு உட்படுத்தியபோது, அவர் செயல்படமுடியாத அளவுக்கு முதுமை அடைந்துவிட்டாரெனவும் அவர் தமது பதவியை விட்டு விலகவேண்டும் என்றும் அவரால் அரசியல் 'ஞானஸ்நானம்' செய்யப்பட்ட சுமந்திரன் கூறியது பலத்த சர்ச்சையைத் தோற்றுவித்திருந்தது.

அவ்வாறு அவர் கூறியதால் முதலில் சந்தோசப்பட்டிருக்கக்கூடியவர் வேறுயாருமாக இருக்கமுடியாது. அவர் அப்படி பதவி விலகியிருந்தால் அந்தப் பதவிக்கு வரக்கூடியவரே முதலில் சந்தோசப்பட்டிருப்பார். திருகோணமலை மாவட்டத்தில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் சம்பந்தர் ஐயாவுக்கு அடுத்த நிலையில் விருப்பு வாக்கைப் பெற்றிருந்தவர் கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குகதாசன் என்பவரே.

இன்று அவரின் கட்டுப்பாட்டிலேயே தமிழரசு கட்சியின் திருமலை மாவட்ட குழு இருப்பதாகவும் தனது ஆதரவாளர்கள் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனர் என்றுமே சம்பந்தன் ஐயா தொடர்ந்து புகார் தெரிவித்து வந்திருக்கிறார். சம்பந்தன் செயல்படமுடியாத நிலையில் இருக்கிறார் என்று பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்டதிலிருந்து அவர் சற்று தீவிரமாகவே அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

தொடர்ந்து வெளிநாட்டு தூதுவர்களை சந்திப்பதும் அதிகம் ஏன் ரணில் விக்கிரமசிங்க பேச்சுக்கு கூப்பிட்டதும் அதனால் பயனில்லை என்பதைத் தெரிந்துகொண்டபோதிலும் தவறாது சென்று கலந்துகொண்டதும், தான் இன்னமும் செயல்பாட்டு அரசியலில் இருக்கின்றேன் என்பதை சொல்வதற்காகத் தான் என்பது அவரைத் தெரிந்தவர்களுக்கு தெரியும்.

நீண்டகாலம் பாராளுமன்றத்துக்கு பிரசன்னம் ஆகாமல் இருந்துவந்த சம்பந்தன் ஐயா நேற்றுமுன்தினம் திடீரென்று பாராளுமன்றம் வந்தார்.

தனக்காக லீவு விண்ணப்பத்தை தாக்கல் செய்யச் சொல்லி யாரிடமாவது பொறுப்பை ஒப்படைத்தால், அவர்கள் அதனைச் செய்யாமல் விட்டுவிட்டால், தான் பதவியை இழக்கவேண்டி வந்துவிடும் என்ற எண்ணமோ தெரியவில்லை, அவர் நேரில் பாராளுமன்றம் வந்து வருகை புத்தகத்தில் கையெழுத்து வைத்துவிட்டார். இனி அவர் மீண்டும் மூன்று மாதங்கள் வராமல் இருந்தாலும் அவரது பதவிக்கு ஆபத்து வரப்போவதில்லை.

லீவுக்கு விண்ணப்பித்து அனுமதி பெறாத ஒருவர், மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக பாராளுமன்றம் வராமல் விட்டால் அவர் தனது பதவியை இழந்துவிடுவார். இவ்வாறு பதவி இழந்த அனுபவம் நமது ஈழவேந்தன் எம். பிக்கு உண்டு.

சம்பந்தன் பாராளுமன்றம் வந்தமைபற்றி சொல்வதல்ல இந்தப் பத்தியின் நோக்கம். அவர், மிகவும் பலவீனமடைந்துவிட்டார், அவர் பேசுவதை மற்றவர்களால் புரிந்துகொள்ள முடிவதில்லை என்றுதான் இதுநாள் வரை பலரும் கூறிக்கொண்டிருந்தனர். ஆனால், அப்படி அல்ல என்பதை நேற்று முன்தினம் அவரை பாராளுமன்றில் சந்தித்த ஓர் எம். பி. உறுதிப்படுத்தினார்.

அவர் பாராளுமன்றம் சென்றிருந்தபோது, அவரை ஓர் இடத்தில் வைத்து யாழ். மாவட்ட எம். பி. சிறீதரன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது வேறும் சில தமிழ் எம். பிக்களும் அங்கே இருந்தனர். அந்த இடத்துக்கு வந்த முன்னாள் உபசபாநாயகர் சந்திம வீரக்கொடி, அவரிடம் வந்து 'எப்படி இருக்கிறீர்கள்?' என்று ஆங்கிலத்தில் கேட்க, அவரோ உற்சாகமாக 'ஐ ஆம் ஃபைன்... ஒன்லி மை பொடி இஸ் நொட் ஓகே..' என்றாராம்.

சிறீதரனுடன் அவர் தமிழரசு கட்சியின் தலைவர் தெரிவு, தேசிய மாநாடு என்று பல விடயங்களையும் பேசிக்கொண்டிருந்தபோது அருகில் இருந்தவர்களுக்கும் அவை பற்றி விளங்கும் அளவுக்கு அவர் தெளிவாக பேசிக்கொண்டிருந்தாரென அங்கிருந்த ஒருவர் கூறினார்.

அந்த சந்திப்பை பற்றிக் கூறிக்கொண்டிருந்த ஒருவர் கூடவே ஒரு தகவலையும் சொன்னார். அங்கிருந்த ஒரு தமிழ் எம். பி. அவரை மரியாதை நிமிர்த்தம்கூட அருகே சென்று நலம் விசாரிக்கவில்லை என்றும் அங்கே இருந்தவர்களை அது முகம்சுழிக்க வைத்ததாம்.!

அன்றைய சந்திப்பை கவனித்த மற்றுமோர் எம். பி. சொன்னார், சம்பந்தனின் திடீர் உற்சாகத்தைப் பார்த்தால், அவர் திருமலையில் நடக்கும் கட்சி மாநாட்டுக்கு சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று.

- ஊர்க்குருவி.

# தீபச்செல்வனின் 'பயங்கரவாதி' நாவல் அறிமுகவிழா உணர்வுபூர்வமாக நடந்தது!



யாழ்ப்பாணம், ஜன. 11

எழுத்தாளரும், யாழ். பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றிய செயலாளருமான தீபச்செல்வனின் 'பயங்கரவாதி' நாவல் அறிமுகவிழா நேற்று புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்த விழாவுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் கே. துவாரகன் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எஸ். ரகுராம், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலையின் அரசறிவியல் துறை தலைவர் பேராசிரியர் கலாநிதி கே. ரி கணேசலிங்கம் கலந்து சிறப்பித்தனர்.

வரவேற்புரையை கலைப் பீட மாணவர் ஒன்றியத் தலைவரான யோ. நெவில்குமார், வெளியீட்டுரையை நாடக கலைஞரும் விமர்சகருமான அ. சத்தியானந்தன் நிகழ்த்தினார்.

நூலை பேராசிரியர் ரகுராம் வெளியிட்டு வைக்க மாணவர் ஒன்றிய தலைவர் துவாரகன் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சிறப்பு பிரதிகளை பேராசிரியர் கணேசலிங்கம் வழங்கி வைத்தார்.

இவற்றைத் தொடர்ந்து, கலாநிதி ரகுராம் அவர்களின் பிரதம விருந்தினர் உரையும், கலாநிதி கே.ரி கணேசலிங்கத்தின் சிறப்பு விருந்தினர் உரையும் நடைபெற்றன. நூல் தொடர்பிலான விமர்சன உரையை யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி. செல்வமனோகரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து நூலாசிரியரும், எழுத்தாளருமான தீபச்செல்வனின் ஏற்புரையை தொடர்ந்து நன்றியுரையினை கலைப்பீட மாணவர் ஒன்றிய செயலாளரான சி.கிருஷ்ணராஜ் வழங்கினார்.

நூல் வெளியீட்டு விழாவில் மாணவர்கள், கல்வியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# தொழுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 11

இலங்கையில் கடந்த ஆண்டில் 1,550 தொழுநோயாளிகள் அடையாளம் காணப்பட்டதாகவும் அவர்களில் 173 பேர் பாடசாலை மாணவர்கள் எனவும் தொழுநோய் எதிர்ப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.

மேலும், அதிக நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்தும் இரண்டாவது மற்றும் மூன்றாவது அதிக நோயாளர்கள் கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களிலிருந்தும் பதிவாகியுள்ளனர்.

பாடசாலை மாணவர்களிடையே அதிகரித்து வரும் நோய்த்தொற்றுகளைக் கருத்தில் கொண்டு, தொழுநோய் தொற்றுகளைக் கண்டறிவதற்கான தேசிய அளவிலான திட்டம் பாடசாலை மட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# இலங்கையில் நெற்செய்கைக்கு பங்களிப்பு செய்யவுள்ள சீனா!

கொழும்பு, ஜன. 11

அதிக விளைச்சலுடன் கூடிய நெற்பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்காக இலங்கையுடன் தமது நிபுணத்துவத்தை பகிரவுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்தபோதே இலங்கைக்கான சீன தூதுவர் லீ கியாங் இதனை தெரிவித்ததாக பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகளை எதிர்வரும் சிறுபோக பருவத்தில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயத்துறையை நவீனமயமாக்கும் இலங்கையின் முயற்சிகளுக்கு சீன அரசாங்கம் தொடர்ந்து ஆதரவளிக்கும் எனவும் சீனத் தூதுவர் குறிப்பிட்டதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

## சீரற்ற காலநிலை; 11,170 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஜன. 11

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 3,348 குடும்பங்களைச் சேர்ந்த 11,170 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரையில் 3 வீடுகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் 112 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

அத்துடன் 399 குடும்பங்களைச் சேர்ந்த 1,237 பேர் தங்களது இருப்பிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். (அ)

# வீதிகளை புனரமைக்க அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஜன. 11

ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதி புனரமைப்பு திட்டத்தின் கீழ், தற்போது புனரமைப்பு பணிகள் பிற்போடப்பட்டுள்ள வீதிகளில் இந்த ஆண்டில் 15 ஆயிரம் கிலோமீற்றர் வீதிகளை போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான முழுமையான செலவு 20 பில்லியன் ரூபாய்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில், 6 மாதங்களில் குறித்த பணிகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஆண்டின் முதல் 6 மாதங்களில், தெரிவு செய்யப்பட்டுள்ள வீதிகளை போக்குவரத்துக்கு ஏற்புடைய வகையில் புனரமைப்பதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

(அ)

ஈழநாடு
Eelanadu
11.01.2024 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 26

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஐம்பது ஆண்டுகள் பின்நோக்கி...!

1974ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின்போதான படுகொலைகளின் 50ஆவது ஆண்டு நேற்றைய தினம் நினைவுகூரப்பட்டது. இவ்வாறான நினைவு கூருதல்களின்போது, ஒரு மலைப்பு ஏற்படுவதுண்டு. ஐம்பது வருடங்கள் கடந்துவிட்டதே! - ஐம்பது வருடங்கள் என்பது மனித வாழ்வில் ஒரு தலைமுறையின் காலமல்லவா! 1974 என்பது தமிழ்த் தேசிய அரசியல் அதன் இரண்டாம் கட்டத்துக்கான தயார்படுத்தல்களில் ஈடுபட்ட காலம். அன்று அரசியலைப் புரட்டிப் போடும் கனவுகளுடன் - புரட்சிகர சுலோகங்களுடன் வெளியில் வந்தவர்களில் பலர் இன்று காலமாகிவிட்டனர். அவர்கள் எவரையும் இன்றைய தலைமுறைக்குத் தெரியாது. அவர்களில் ஒரு சிலரே வாழ்கின்றனர்.

எத்தனை இயக்கங்கள், எத்தனை முழக்கங்கள் - இறுதியில் அனைத்துக்கும் என்ன நடந்தது - ஏன் இத்தனை இயக்கங்கள் இருந்தும் அரசியலில் வெற்றியை அறுவடை செய்ய முடியாமல் போனது? ஏன் தமிழினம் தொடர்ந்தும் தோற்றுக் கொண்டே இருக்கின்றது. ஐம்பது வருடங்களுக்கு பின்னர், தமிழாராய்ச்சி மகாநாட்டின்போதான படுகொலைகளை நினைவுகொள்ளும்போது முக்கியமாகக் கேட்கப்பட வேண்டிய கேள்வி இதுதான். ஆனால், நமக்குள் இன்னும் இந்தக் கேள்வி கேட்கப்படாமலேயே தொடர்கின்றது. இதனால், தொடர்ந்தும் தோல்வியின் பாதையே பிரகாசமாக தெரிகின்றது.

“அரசியல் என்பது சாத்தியங்களின் கலை - அது ஒரு துல்லியமான விஞ்ஞானமல்ல” - என்னும் ஒரு கூற்றுண்டு. தமிழில் ஒரு பழமொழியுண்டு - அதாவது, ‘காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளுதல். ஆனால், இந்த அடிப்படையில் தமிழரின் அரசியல் முன்னெடுக்கப்படவில்லை. அடைந்தால் ‘மகாதேவி இல்லையேல் மரண தேவி’ - என்னும் அடிப்படையில்தான் தமிழரின் அரசியல் இன்றுவரையில் முன்னெடுக்கப்படுகின்றது.

வரலாற்றிலிருந்து எந்தவொரு பாடத்தையும் கற்றுக்கொள்ளும் நிலையில் எவருமில்லை. தனிநாட்டு கோரிக்கையை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்ட அமிர்தலிங்கம் பிற்காலத்தில் மாவட்ட சபை கோரிக்கையை நோக்கி இறங்கிவந்தார். அமிர்தலிங்கத்துக்கு அதற்கான அரசியல் துணிவு இருந்தது. அனைவரும் தயங்கியபோது - பின்வாங்கியபோது - ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டது. அமிர்தலிங்கம்கூட துணியாதபோது, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அன்றைய வரலாற்று கடமையை நிறைவேற்றியது. அன்றைய சூழலில் அவர்களின் செயல்பாட்டை தூர நோக்குடன் எவரும் பார்த்திருக்கவில்லை. ஆனால், இன்றைய சூழலிலிருந்து நோக்கும்போது, அது சரியென்பதை வரலாறு நிரூபித்திருக்கின்றது.

இவ்வாறான ஒரு சில சந்தர்ப்பங்களை தவிர, தமிழரின் அரசியல் வரலாற்றில் காலத்தைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்பட்டதற்கான உதாரணங்கள் இல்லை. அரசியல் நகர்வுகளுக்கு காலத்தை புரிந்துகொள்வது மிகவும் அவசியம். ஒவ்வொரு காலகட்டத்தையும் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்படுவதன் ஊடாகவே முன்னோக்கி நகர முடியும். முன்னோக்கி நகர்தல் என்பது இருக்கின்ற நிலையிலிருந்து ஒரு படியாவது முன்னோக்கிச் செல்வதாகும்.

ஒட்டுமொத்தமாக, தமிழினம் அரசியலில் வெற்றியைப் பெறமுடியாது. இதுவரைகால தமிழ்த் தேசிய அரசியல் நகர்வுகளிலுள்ள அடிப்படையான பிரச்னை அனைத்துப் பிரச்னைகளையும் ஒட்டுமொத்தமாகத் தீர்க்க வேண்டுமென்று ஆசை கொண்டதுதான். ஒட்டுமொத்தமாக அனைத்து பிரச்னைகளையும் தீர்ப்பதற்குள்ள ஒரேயொரு வழி யுத்தத்தில் வெல்வது மட்டும்தான். அங்கும் வெல்ல வேண்டும் - தோல்வியடைந்தால் எதுவும் இருக்காது.

# மலரன்னையின் அமுத விழாவும் நூல் வெளியீடும் சிறப்புற நடந்தது



*யாழ்ப்பாணம், ஜன. 11*

மலரன்னை என்று எழுத்துலகில் அறியப்பட்ட திருமதி அற்புதராணி காசிலிங்கத்தின் அமுதவிழாவும் அவரின் வாழ்வும் படைப்பும் நூல் வெளியீடு நிகழ்வு திங்கட்கிழமை ஜீவநதி ஏற்பாட்டில் சிறப்புற நடைபெற்றது.

எழுத்தாளரும் சமூக செயல்பாட்டாளருமான கோகிலா மகேந்திரன் தலைமையில் நாச்சிமார் கோவிலடியிலுள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வரவேற்பு உரையை இரா. குலசிங்கம், வெளியீட்டுரையை விரிவுரையாளர் புலோலியூர் வேல்நந்தகுமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெற்றது. மலரன்னையின் வாழ்வும் படைப்பும் நூலை ஜீவநதி ஆசிரியர் பரணீதரன் வெளியிட்டு வைக்க மலரன்னை நூலைப் பெற்றுக் கொண்டார்.

மலரன்னையின் சிறுகதைகள் பற்றி எழுத்தாளர் பிரேமினியும் மலரன்னையின் நாவல்கள் பற்றி விரிவுரையாளர் த. அஜந்தகுமாரும் சிற்றுரை நிகழ்த்தினர்.

அமுத விழா நாயகிக்கான கௌரவிப்பை ஜீவநதி பதிப்பகத்தின் உரிமையாளரும் ஜீவநதி இதழின் ஆசிரியருமான கலாமணி பரணீதரன் வழங்கினார். தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறை தலைவரான சுகந்தினி முரளீதரன் மாலை அணிவித்து கௌரவித்தார்.

தொடர்ந்து, அவருக்கு தமிழர் ஈழ இலக்கிய தாய் என்ற கௌரவ விருதை மலரன்னைக்கு மூத்த எழுத்தாளர் அ. யேசுராசா வழங்கினார்.

நூல் பற்றிய கருத்துரையை எழுத்தாளர் மயூரரூபனும் நிகழ்த்தினார். அதனை தொடர்ந்து ஊரவர்கள், வாசகர்கள், நலன் விரும்பிகள் என பலரும் பொன்னாடை போர்த்தி அவரை வாழ்த்தி கௌரவம் வழங்கினர். மலரன்னை எழுத்தாளரும் போராளியுமான கப்டன் மலரவன் அல்லது லியோ என்று அறியப்பட்ட காசிலிங்கம் விஜித்தனின் தாயார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# செட்டிக்குளம் வைத்தியசாலைக்கு மிகவிரைவில் நிரந்தர பணிப்பாளர்

*வவுனியா, ஜன. 11*

வவுனியா - செட்டிக்குளம் வைத்தியசாலைக்கு நிரந்தர பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

குறித்த வைத்தியசாலையில், தற்காலிக பணிப்பாளர் ஒருவரே நியமிக்கப்பட் டுள்ளதாகவும், நீண்டகாலமாக நிரந்தர பணிப்பாளர் ஒருவர் இன்மையினால் வைத்தியசாலை செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டி அதற்கான நடவடிக்கைகள் குறித்து, நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் பாராளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ரமேஷ் பத்திரன, சுகாதாரத் துறையில் சுமார் 100 வைத்தியசாலை பணிப்பாளர்களுக்கான வெற்றிடம் நிலவுவதாக குறிப்பிட்டார்.

நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு ஒன்றின் காரணமாக அவர்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்க முடியாதிருந்தது.

எனினும், தற்போது குறித்த வழக்கு நடவடிக்கைகள் நிறைவுப் பெற்றுள்ளன.

இந்த நிலையில், அடுத்த வாரம் முதல் நேர்முகத் தேர்வு ஆரம்பமாகவுள்ளது.

இதனையடுத்து, வவுனியா - செட்டிக்குளம் வைத்தியசாலைக்கு புதிதாக நிரந்தர பணிப்பாளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுப்பதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன குறிப்பிட்டார். (அ)

# யுக்திய நடவடிக்கையில் 999 பேர் கைது!

*கொழும்பு, ஜன. 11*

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ‘யுக்திய’ சுற்றிவளைப்பில் மேலும் 999 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் நள்ளிரவு 12.30 மணி வரை மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போதே இந்த கைது இடம்பெற்றுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், இந்த விசேட நடவடிக்கையில் 453 கிராம் ஹெரோயின், 306 கிராம் ஐஸ், 940 கிராம் கொக்கெய்ன் மற்றும் 57 கிலோ கிராம் கஞ்சா போன்ற போதைப்பொருட்களும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 31 பேருக்கு எதிராக தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளது.

அதேநேரம், போதைப் பொருளுக்கு அடிமையான 26 நபர்கள் புனர்வாழ்வுக்கும் அனுப்பப்பட்டுள்ளனர்.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு




**மேடம்**
குடும்பத்தின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து போகும். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். சக ஊழியர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**மிதுனம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் அடைவீர்கள் நன்மை கிட்டும்.

**கடகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தொட்டது துலங்கும்.

**சிம்மம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். நினைத்தது நிறைவேறும்.

**கன்னி**
பிரியமானவளின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
சவால்களில் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உரிமையை பெறுவீர்கள். புது அத்தியாயம் தொடங்கும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் இனம்தெரியாத கவலைகள் வரும். நண்பர்கள், அதிகா ரிகளிடம் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**மகரம்**
குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதம் வந்துப் போகும். வியாபாரத்தில் கணிசமாக லாபம் உயரும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து போகும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். மதிப்புக் கூடும் நாள்.

**மீனம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

# அ. தி. மு. க. தலைமையில் வலுவான தேர்தல் கூட்டணி

## இரகசிய ஆலோசனையில் பழனிசாமி

*சென்னை, ஜன. 11*

பாராளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ளது. இதையடுத்து அ. தி. மு. க. தலைமையில் வலுவான கூட்டணி அமைக்கப்படும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தற்போது அ. தி. மு. க. கூட்டணியில் பழைய கூட்டணி கட்சிகளில் புரட்சி பாரதம் கட்சி மட்டுமே நீடிக்கிறது. கூட்டணியில் இடம் பெற்றிருந்த பா. ம. க., தே. மு. தி. க. உள்ளிட்ட முக்கிய கட்சிகள் எந்த முடிவையும் தெரிவிக்காமலேயே உள்ளன.

கூட்டணியில் முக்கிய அங்கம் வகித்த தேசிய கட்சியான பாரதிய ஜனதாவுடனான உறவையும் அ. தி. மு. க. முறித்துக் கொண்டது. எனவே வருகிற பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணியை வலுப்படுத்துவது, குறிப்பிட்ட எண்ணிக்கையில் எம். பி. தொகுதிகளை கைப்பற்றுவது தொடர்பாக எடப்பாடி பழனிசாமி பல்வேறு இரகசிய திட்டங்களை வகுத்து வருகிறார்.

கூட்டணியில் பிரதான கட்சிகள் ஏதும் தற்போதைய சூழலில் இடம் பெறாத நிலையில் பாராளுமன்றத் தேர்தல் களம் நிச்சயம் அ. தி. மு. க. வுக்கு சவாலானதாகவே இருக்கும். இருப்பினும் அதற்கேற்ப அவர் திட்டங்களை தீட்டி வருகிறார்.

இது தொடர்பாக எடப்பாடி பழனிசாமி அடிக்கடி ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி வருகிறார். அந்த வகையில் நேற்று நடைபெற்ற அ. தி. மு. க. ஆலோசனை கூட்டத்தில் வாக்குச்சாவடிகளை வலுப்படுத்துவது, கட்சி பணிகளை தீவிரப்படுத்துவது தொடர்பாக எடப்பாடி பழனிசாமி பல்வேறு கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

தி.மு.க. கூட்டணியில் கூட்டணி தொடர்பாகவோ, தொகுதிகள் பற்றியோ எந்தவித அறிவிப்பும் வெளியிடப்படாமலேயே உள்ளது. எனவே, அ.தி.மு.க.விலும் தொகுதிகள் தேர்வு, வேட்பாளர்கள் தெரிவு ஆகியவற்றை இரகசியமாக மேற்கொள்ள எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் நடந்த ஆலோசனை கூட்டத்தில், அ. தி. மு. க. கூட்டணியில் ஏற்கனவே இடம் பெற்றிருந்த பா. ம. க., தே. மு. தி. க. ஆகிய கட்சிகளை மீண்டும் கூட்டணியில் சேர்ப்பது பற்றியும் விவாதிக்கப்பட்டது. (ஐ)

# செந்தில் பாலாஜி பிணை; வழக்கு தீர்ப்பு நாளை!

*சென்னை, ஜன. 11*

சட்டவிரோதப் பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் அமைச்சர் செந்தில் பாலாஜியை அமுலாக்கத்துறையினர் கடந்த ஆண்டு ஜூன் 14 அன்று கைது செய்தனர். இந்த வழக்கில் 3ஆவது முறையாக செந்தில் பாலாஜிக்கு பிணை கோரி தொடரப்பட்ட வழக்கு விசாரணை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். அல்லி முன்பாக நேற்று முன்தினம் நடைபெற்றது.

அப்போது செந்தில் பாலாஜி தரப்பில் ஹஹஇந்த வழக்கின் ஆவணங்கள்அனைத்தும் வழக்கின் விசாரணைக்கு ஏற்ப திருத்தப்பட்டுள்ளன. அதற்கான ஆதாரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. செந்தில் பாலாஜியின் வங்கிக் கணக்கில் இருந்த உண்மை தொகைகளை திருத்தி பொய்யாக முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. 180 நாட்களுக்கும் மேலாக செந்தில் பாலாஜி சிறையில்இருப்பதால் அவருக்கு ஜாமீன் வழங்க வேண்டும்" என வாதிடப்பட்டது.

அமுலாக்கத் துறை தரப்பில், ஹஹகடந்த 2016-17-ம் ஆண்டின் இடைப்பட்ட காலகட்டத்தில் குறிப்பிட்ட வங்கிக் கணக்கில் திடீரென பல இலட்சம் ரூபாய் வைப்பிலிடப்பட்டது.

செந்தில் பாலாஜியின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட பென்டிரைவில் யார், யாரிடம் எவ்வளவு பணம் பெறப்பட்டுள்ளது. அவர்களின் பெயர்கள், முகவரிகள் உள்ளிட்ட அனைத்து விவரங்கள் உள்ளன. செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக் தற்போது வரை தலைமறைவாக உள்ளார். எனவே செந்தில் பாலாஜிக்கு பிணை வழங்கக் கூடாது" எனவாதிட்டனர்.

இரு தரப்பு வாதங்களும் நிறைவடைந்ததால் இந்த வழக்கில் வரும் நாளை வெள்ளிக்கிழமை தீர்ப்பளிக்கப்படும் என நீதிபதி அறிவித்தார்.

(ஐ)

# தி. மு. க. மீதான சட்டப் போராட்டத்தை பா. ஜ. க. தொடர்ந்து முன்னெடுக்கும்!

## அந்தக் கட்சியின் தமிழக தலைவர் தெரிவிப்பு

*சென்னை, ஜன. 11*

"முரசொலி அலுவலகம் அமைந்துள்ள இடம் பட்டியல் சமூக மக்களுக்குச் சொந்தமான பஞ்சமி நிலம் என்ற குற்றச்சாட்டு பல ஆண்டுகளாக உள்ளது. எனவே, தி. மு. க. இனியும் விசாரணையைத் தள்ளிப் போட முயற்சிக்காமல், விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பட்டியல் சமூக மக்களுக்குச் சொந்தமான பஞ்சமி நிலங்களை மீட்டுக் கொடுக்கும் பா. ஜ. கவின் சட்டப் போராட்டம் தொடரும்" என்று பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில், "தி. மு. கவின் அதிகாரபூர்வ பத்திரிகையான முரசொலி அலுவலகம் அமைந்திருக்கும் இடம், பட்டியல் சமூக மக்களுக்குச் சொந்தமான பஞ்சமி நிலம் என்ற குற்றச்சாட்டு பல ஆண்டுகளாக உள்ளது. பல தளங்களில் கேள்வி எழுப்பியும், இந்தக் குற்றச்சாட்டு குறித்து விளக்கமளிக்க வேண்டிய தி. மு. கவோ, இதற்கு பதில் கூறுவதைத் தவிர்த்து வருவது பொதுமக்களிடையே பலத்த சந்தேகத்தை எழுப்பியிருக்கிறது.



இது குறித்து தேசிய பட்டியலின ஆணையம் விசாரிக்கக் கோரி, கடந்த 2019-ஆம் ஆண்டு முறைப்பாடு செய்யப்பட்டது. இதனை ஆணைக்குழு விசாரிக்கக் கோரி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தி. மு. க. இனியும் விசாரணையைத் தள்ளிப் போட முயற்சிக்காமல், விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். பட்டியல் சமூக மக்களுக்குச் சொந்தமான பஞ்சமி நிலங்களை மீட்டுக் கொடுக்கும் பா. ஜ. கவின் சட்டப்போராட்டம் தொடரும்" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

(ஐ)

# இனியாவது நாட்டுப்பற்றுடன் செயல்படுவதற்கு முன்வருக!

## தென்னிலங்கை அரசியல் சமூகத்திற்கு சுரேஷ் அறைகூவல்

யாழ்ப்பாணம், ஜன. 11

**“நாட்டின் அந்நிய செலாவணியை சேமிப்பதற்கும் விவசாயத்தைத் தொழிற்சாலையாக மாற்றுவதற்கும் உழைத்த வடக்கு-கிழக்கின் பொருளாதார வளங்களை அழித்துவிட்டு அதற்காக ஒரு வருத்தம்கூட தெரிவிக்காதவர்கள் இன்று வடக்கின் பொருளாதார அபிவிருத்தி குறித்து பேசுவது தேர்தல் பிரசாரத்திற்காக மட்டுமே. தென்னிலங்கை அரசியல் சக்திகளிடத்தில் அனைத்து தேசிய இனங்களையும் ஐக்கியப்படுத்தி நாட்டுப்பற்றுடன் இலங்கையை வளமிக்க நாடாக மாற்றுவதற்கான எந்தத் திட்டமும் இல்லை என்பதும் நாட்டு மக்களை பிளவுபடுத்தி தமக்கான வாக்கைப் பெற்றுக்கொள்வதை மட் டுமே நோக்கமாகக் கொண்டுள்ளன என்பதும் ஜனாதிபதியின் அண்மைய வடமாகாண விஜயமும் நிரூபித்துள்ளது.”**

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது இரண்டாவது ஆண்டின் துவக்கத்தில் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு, மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்காகவும் ஏனைய சந்திப்புக்களை நிகழ்த்துவதற்காகவும் வடக்கு மாகாணத்திற்கு கடந்த 04.01.2024 முதல் 08.01.2024 வரை விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

அவரது வருகை தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட எதிர்பார்ப்புகள் இருந்தன. மிச்சம் மிகுதியாக உள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான முடிவுகள் எட்டப்படவேண்டும், காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவேண்டும். பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு மாகாணசபை தேர்தல்கள் நடைபெறவேண்டும்.

பௌத்த சிங்களமயமாக்கலை நோக்கமாகக் கொண்டு தமிழர் பிரதேசங்களில் பலாத்காரமாக நிர்மாணிக்கப்படும் பௌத்த கோயில்களின் பணிகள் நிறுத்தப்படவேண்டும். இவை தொடர்பில் ஜனாதிபதி தெளிவான பதிலை அளிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த விடயங்கள் தொடர்பாக அவர் தமது விஜயத்தின்போது மேற்குறிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எந்தவிதமான ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களையோ தெளிவுபடுத்தல்களையோ மேற்கொள்ளவில்லை.

அவர் தொடர்ச்சியாகப் பேசி வரும் அபிவிருத்தி தொடர்பில் மாத்திரமே பேசினார். இதற்கு முன்னரும் அபிவிருத்தி தொடர்பில் அவர் பல்வேறு கருத்துகளைக் கூறியிருக்கின்றார். ஆனால் அவற்றுக்கான முறையான நிதி ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இந்த அரசாங்கத்தின் மேல் தொடர்ச்சியாக இருந்து வருகின்றது. ஜனாதிபதிக்கும் சிங்கள அரசியல் தலைமைகளுக்கும் கடந்தகாலத்தை நினைவுபடுத்த விரும்புகிறோம்.

யுத்தத்திற்கு முன்பாக, முழு இலங்கைக்கும் தேவையான விவசாய உற்பத்திகளையும் கடல் உணவுகளையும் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் பெருமளவில் வழங்கிவந்தன. முப்பது வருட யுத்தத்தில் எமது விவசாயம் முற்றாக அழிக்கப்பட்டது. மக்கள் இடம்பெயர்ந்தார்கள். விவசாயக் காணிகள் தரிசு நிலங்களாகவும் காடாகவும் மாறியது. இருந்த ஒருசில தொழிற்சாலைகளும் யுத்தத்தைக் காரணம்காட்டி அழித்தொழிக்கப்பட்டன. முழு இலங்கைக்கும் உணவளித்த மக்கள் தமக்கே வாழ்வாதாரம் இல்லாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து, அந்த மக்கள் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கு வழிசமைத்துக்கொடுக்க வேண்டிய அரசாங்கம் அதுதொடர்பில் எத்தகைய பிரத்தியேக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அதுமட்டுமன்றி, காடாக மாறியுள்ள அவர்களது காணிகளை விடுவிப்பதற்கே அவர்கள் கடந்த பதினான்கு வருடங்களாகப் போராடி வருகின்றனர்.

இந்த இலட்சணத்தில்தான், சிங்கள அரசாங்கத்தின் செயற்பாடு இருக்கின்றதென்பதை ஜனாதிபதி புரிந்துகொள்ள வேண்டும். யுத்தத்திற்குப் பின்னர், வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் அரசாங்கத்தின் உதவிகள் ஏதுமின்றி, தமது வாழ்வாதாரத்தையும் வாழ்க்கைமுறையையும் தாமே கட்டியெழுப்பிக் கொள்வதற்காக வைராக்கியத்துடன் தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.

யதார்த்தங்கள் இவ்வாறிருக்கையில், ஜனாதிபதி குறிப்பிடுகின்ற வடக்குமாகாண அபிவிருத்தி என்பது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதை நாங்கள் பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அதேசமயம், தமிழ்க் கட்சிகள் முன்வைத்த பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார அபிலாசைகளை நிறைவேற்றுவது தொடர்பில் எந்தவிதமான ஆணித்தரமான பதில்களும் அளிக்காமல் பதின்மூன்றாவது திருத்தம் என்பது பொருளாதார அபிவிருத்திக்குப் போதுமானது என்ற கருத்தை மாத்திரம் கூறிச்சென்றிருக்கின்றார்.

பதின்மூன்றாவது திருத்தம் என்பது, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம், தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்காக உருவாக்கப்பட்ட மாகாணசபைகளுக்கான அதிகாரங்களை மையமாகக் கொண் டது. கடந்த ஐந்து வருடங்க ளுக்கு மேலாக மாகாணசபை தேர்தல்களை நடாத்தாமல் இருப்பதுடன், பதின்மூன்றாவது திருத்தத்தினூடாக மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட பல அதிகாரங்கள் மீளவும் மத்திய அரசால் பறிக்கப்பட்டும் இருக் கின்றது.

இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் தமிழ்த் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வு என்ப முக்கியமானது. இவை இல்லாமல், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது ஒருபொழுதும் சீராக நடைபெறாது. வெளிநாட்டு முதலீடுகளையும் அரசாங்கம் எதிர்பார்க்க முடியாது.

இதனைப் புரிந்துகொண்டு மாகாணசபைத் தேர்தல்களை நடாத்தி, அதற்குரித்தான முழுமையான அதிகாரங்களை வழங்கி, சர்வதேச முதலீடுகளைக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களை மாகாண அரசுகளுக்கு வழங்குவதன் மூலமே இலங்கையின் பொருளாதாரமும் அரசியல் ஸ்திரத்தன்மையும் வலுவடையும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பிலும்சரி, யாழ்ப்பாணத்திலும்சரி புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீடுகள் அவசியம் என்பதை மீண்டும் மீண்டும் கூறிவருகின்றார். கடந்த காலங்களில் தென்பகுதியிலிருந்த தமிழ் மக்களின் பொருளாதாரம் என்பது அடிக்கடி அரசாங்கம் உருவாக்கிய இனக் கலவரங்களினால் நிர்மூலம் செய்யப்பட்டது.

இதன் காரணமாக, பல இலட்சம் கோடி மதிப்புள்ள சொத்துகளை தமிழ் மக்கள் இழந்து அகதிகளாகக் கப்பலேற்றி அனுப்பப்பட்ட வரலாறுகள் தமிழ் மக்களுக்குண்டு. இவ்வாறான ஒரு சூழ்நிலையில், புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீடுகளுக்கு எவ்விதப் பாதுகாப்பும் இல்லாமல், அவற்றை எதிர்பார்ப்பதென்பது தமிழ் மக்களை மேலும் மேலும் முட்டாள்கள் என்று நினைப்பதற்கு ஒப்பாகும்.

மாகாணங்களுக்கென ஒதுக்கப்பட்ட பொலிஸ் அதிகாரங்கள், காணி அதிகாரங்கள் போன்றவற்றை வழங்கி, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரங்களையும் மாகாணங்களுக்கு வழங்கி, சர்வதேச முதலீடுகளைக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதனூடாகத்தான் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளுக்கு பாதுகாப்புக் கிட்டும் என்பதை ஜனாதிபதியும் அவருடைய தலைமையிலான அரசும் புரிந்துகொள்ள வேண்டும். இதை வழங்குவதனூடாக ஜனாதிபதி குறிப்பிடும் வடக்கை பொருளாதார மையமாக மாற்றலாம் என்பது மட்டுமன்றி, தென் ஆசியாவின் நிதி ஆதார மையமாகவும் மாற்ற முடியும்-என்றார். (அ)

# கதிர்காமம்-கொழும்பு அரச பஸ்ஸில் வேட்டையாடப்பட்ட இறைச்சி மீட்பு!

## பஸ் சாரதி, நடத்துநர் கைது

கொழும்பு, ஜன. 11

இ.போ.ச பஸ் ஒன்றிலிருந்து சட்டவிரோதமாக வேட்டையாடப்பட்ட இறைச்சி மீட்கப்பட்ட நிலையில் பஸ் சாரதி மற்றும் நடத்துநர் சந்தேகத்தின் பேரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி வீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட போக்குவரத்துச் சோதனை நடவடிக்கையில் கதிர்காமம்-கொழும்பு இ.போ.ச பஸ் ஒன்றின் பின் புறத்திலுள்ள பெட்டியிலிருந்து சட்டவிரோதமாக வேட்டையாடப்பட்ட 100 கிலோ இறைச்சியை அதிரடிப்படையினர் கைப்பற்றினர்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த பொதியின் உரிமையாளர் முன்வராததால் பஸ் சாரதி மற்றும் நடத்துநர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

அம்பலாந்தோட்டை டிப்போவுக்கு சொந்தமான இ.போ.ச பஸ் ஒன்றே இவ்வாறு பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டுள்ளனர். (அ)

# அதிக விலைக்கு உரம் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை



கொழும்பு, ஜன. 11

வற் வரி தாக்கம் செலுத்துவதாக கூறி அதிக விலைக்கு உரத்தை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது குறித்து நுகர்வோர் அதிகார சபைக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நெற் பயிர் செய்கைக்காக உர மூடை ஒன்றை 9,000 ரூபாவுக்கு விற்பனை செய்யுமாறு வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், உர மூடை விலையிலும் வற் வரி தாக்கம் செலுத்துவதாக கூறி வர்த்தகர்கள் அதிகூடிய விலையில் உரத்தை விற்பனை செய்வதாக தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் விவசாய அமைச்சர் கூறினார். (அ)

# பொலநறுவை - மட்டக்களப்பு வீதி வெள்ளத்தில் மூழ்கும் அபாயநிலை

கொழும்பு, ஜன. 11

பொலனறுவை - மட்டக்களப்பு வீதி கல்லெல்ல பகுதியிலிருந்து மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலனறுவை - மட்டக்களப்பு வீதி வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் உள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பொலனறுவை - மட்டக்களப்பு வீதியின் குறுக்கே கல்லெல்ல பாலத்திற்கு அருகில் சுமார் ஒரு அடி நீர்மட்டம் காணப்படுகின்றது.

தொடர் மழை காரணமாக மகாவலி கங்கையின் நீர் மட்டம் அதிகரித்து வருவதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (அ)


# காணவில்லை



தருமன்கலட்டி, தெல்லிப்பழை என்ற முகவரியை சேர்ந்த

**சோமசுந்தரம் உதயகுமார்**

(உளநலம் பாதிக்கப்பட்டவர்)

என்பவர் கடந்த 2023.11.20 முதல் காணாமற்போயுள்ளார். இவரைக் கண்டவர்கள் அல்லது இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்க.

**தொலைபேசி - 0754084527**

# நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பிக்குகள் தடை என தவறான கருத்து

## நீதியமைச்சர் விஜயதாஸ விசனம்

**கொழும்பு, ஜன. 11**
**நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஸ்தாபிப்பதில் பௌத்த பிக்குகள் தடையாக உள்ளார்கள் என்ற தவறான நிலைப்பாடு சர்வதேசத்தின் மத்தியில் காணப்படுகிறது. அனைத்தையும் எதிர்க்கும் ஒரு சில 'வொயிஸ் கட்' பிக்குகளினால் இந்த நிலை காணப்படுகிறது. தேசிய நல்லிணக்கத்தை ஸ்தாபித்து தவறுகளை திருத்திக்கொள்ளுமாறு மகாநாயக்க தேரர்கள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள் என நீதி,சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**



இன வன்முறையால் இலங்கை பொருளாதார ரீதியில் பின்னடைந்துள்ளது. இலங்கையில் இரண்டாம் தரப் பிரஜைகள் என்று எவருமில்லை என்பதை உறுதிப்படுத்துவது தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான அலுவலகச் சட்டமூலத்தில் நோக்கமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான அலுவலக சட்டமூலம்,தேசிய நீரளவை சட்டமூலம் என்பனவற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் என்பது முக்கியமானது. இது இன்று நேற்று ஆரம்பமான பேசுபொருளல்ல, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் ஆட்சியில் யுத்த சூழலின்போது இந்த அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அப்போது நிர்வாக மட்டத்தில் மாத்திரம் அந்தஸ்த்து வழங்கப்பட்டது. தற்போது அரசியலமைப்பின் ஊடாக அங்கீகாரம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்பினால் ஒட்டுமொத்த மக்களும் தற்போது நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். பல ஆண்டுகாலமாக கடைப்பிடித்த தவறான பொருளாதார கொள்கை, இனவாத முரண்பாடுகள் உள்ளிட்ட காரணிகளால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. அரச கட்டமைப்புக்களும் வீழ்ச்சியடைந்தன.

சமூக கட்டமைப்பில் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஸ்தாபிப்பதுடன் பாராளுமன்றத்திலும் ஒற்றுமை, நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டும். ஒருசிலரது முறையற்ற செயற்பாடுகளினால் 225 உறுப்பினர்களையும் மக்கள் வெறுக்கிறார்கள். இந்நிலைமை மாற்றமடைய வேண்டும்.

ஒரு காலத்தில் கிராமப்புறங்களில் இன நல்லிணக்கம் சிறந்த முறையில் இருந்தது. ஆனால் தற்போது கிராம புறங்கள் இனம், மதம் மற்றும் அரசியல் ரீதியில் பிளவுபட்டுள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் தேசிய நல்லிணக்கத்தை ஸ்தாபிப்பது குறித்து புலம்பெயர் தமிழ் அமைப்புகள் அண்மையில் ஜனாதிபதி உட்பட மத தலைவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்கள். ஒரு தரப்பினர் இதற்கு சாதகமாக பேசியுள்ள நிலையில் பிறிதொரு தரப்பினர் விமர்சனங்களை முன்வைத்துள்ளார்கள்.

தேசிய நல்லிணக்கத்துக்கு பௌத்த பிக்குகள் எதிராக உள்ளார்கள் என்ற தவறான நிலைப்பாடு சர்வதேசத்தின் மத்தியில் காணப்படுகிறது. அனைத்தையும் எதிர்க்கும் ஒருசில 'வொயிஸ் கட்' பிக்குகளால் ஒட்டுமொத்த பிக்குகளும் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகிறார்கள்.

ஆகவே தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்த விசேட கவனம் செலுத்தி தவறுகளை திருத்திக் கொள்ளுமாறு மகாநாயக்க தேரர்கள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள்.

சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினர் இனவாதத்தை விரும்பவில்லை. அமைதியாக வாழும் சூழலுடன் இலங்கையர் என்ற அடிப்படையில் வாழ விரும்புகிறார்கள். ஒரு சில அரசியல்வாதிகள் இனவாதத்தை ஒக்சிசன் போல் பயன்படுத்துகிறார்கள். இனவாதத்தை தூண்டிவிட்டு அதனூடாக அரசியல் செய்கிறார்கள்.

இனத்தை முன்னிலைப்படுத்தி தமிழ்,முஸ்லிம் மற்றும் சிங்களம் என்ற அடிப்படையில் அரசியல் கட்சிகளை பதிவு செய்யும் நிலைமை மாற்றம் பெற வேண்டும். பொது கொள்கைகளை முன்னிலைப்படுத்தும் வகையில் அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட வேண்டும்- என்றார். (அ)

# 3 தேர்தல்களுக்கான காலப்பகுதி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 11
ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல் ஆகியவற்றை நடத்துவம் காலப்பகுதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.

இதன்படி 2024 செப்ரெம்பரில் ஜனாதிபதி தேர்தலையும், 2025 ஜனவரியில் பொதுத்தேர்தலையும், 2025 மார்ச்சில் மாகாண சபைத் தேர்தலை நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக்குழு, ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் கூடியது. இதன்போது இது பற்றி தெரியப்படுத்தப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.

அத்துடன் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை களமிறக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக் குழு முடிவெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறுவர்களின் சலுகைகளைக்கூட இந்த அரசாங்கம் முடக்குகின்றது!

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 11
எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த பயண சீசன் குறைக்க அரசாங்கம் செயற்பட்டு வருவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின்-

உயர்தரப் பொதுத் தரப் பரீட்சை காரணமாக பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில், ஜனவரி மாதம் பருவச் சீட்டு வழங்கப்படாமல் இருக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்திருந்தபோதிலும் பல பாடசாலைகள் விடுமுறைக் காலத்தில் மேலதிக வகுப்புகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

இவ்வாறான சூழ்நிலையில் சீசன் இடைநிறுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு முன்னர் பாடசாலை விடுமுறை நாட்களில் சீசன் டிக்கெட்டை இடைநிறுத்தியது இல்லை.

எனவே, இது தொடர்பில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சருக்கு தெரியப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். சிறுவர்களுக்கான சிறுசிறு சலுகைகளை கூட இந்த அரசாங்கம் குறைப்பது மோசமான செயல்-என்றார். (அ)

# யால பூங்காவில் வெள்ளம்

கொழும்பு, ஜன. 11
தொடர் மழை காரணமாக சிறிய குளங்கள் நிரம்பி வழிவதால் யால பகுதியில் பலதுபன பிரதான நுழைவாயில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதன் காரணமாக சுற்றுலாப் பயணிகளுடன் இரண்டு வாகனங்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ளன.

இந்நிலையில், யால தேசிய பூங்காவுக்குச் செல்வதற்கான பிரதான நுழைவாயில் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

எனினும், கடகமுவ நுழைவாயிலில் இருந்து சுற்றுலாப் பயணிகள் யால பூங்காவுக்குள் பிரவேசிக்க முடியும் என கூறப்பட்டுள்ளது. (அ)

# பிரபல ஹோட்டல் அறையில் அமெ. பிரஜை சடலமாக மீட்பு

கொழும்பு, ஜன. 11
களுத்துறையில் உள்ள பிரபல சுற்றுலா ஹோட்டல் அறையில் அமெரிக்க சுற்றுலா பயணி ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

67 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹோட்டல் நிர்வாகம் பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து, ஹோட்டலின் அறை எண் 324 இல் அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் களுத்துறை குற்றத்தடுப்பு விசாரணை நிலைய அதிகாரிகளும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# வெற்றிலைக்கு புத்துயிர்!

கொழும்பு, ஜன. 11
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை (வெற்றிலை சின்னம்) மீள கட்டியெழுப்புவதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு அனுமதி வழங்கியுள்ளது.

சுதந்திரக்கட்சியின் நிறைவேற்றுக்குழுவும், மத்திய குழுவும் கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கட்சி தலைமையகத்தில் கூடியது.

இதன்போது அடுத்த தேர்தலை கூட்டணி அமைத்து எதிர்கொள்வதற்கும், அதற்காக ஐக்கிய மக்கள் சக்தியை கட்டியெழுப்பவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ)

# சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் 48 மணி நேரப் பணிப் புறக்கணிப்பு

கொழும்பு, ஜன. 11
சுகாதார சேவைகளுடன் இணைந்த இலங்கையின் 10 தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளன.

நேற்று காலை 8 மணிமுதல் 48 மணித்தியால பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளன.

வைத்தியர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள 35,000 ரூபாய் கொடுப்பனவை தங்களுக்கும் வழங்குமாறு கோரி, 10 சுகாதார தொழிற்சங்கங்கள் நேற்று முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளன.

பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம், அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம், அரச மருந்தாளர்கள் சங்கம், மருத்துவ ஆய்வக தொழில் வல்லுநர்கள் சங்கம் மற்றும் அகில இலங்கை தாதியர் சங்கம் உள்ளிட்ட பல தொழிற்சங்கங்கள் இவ்வாறு பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் நிறைவுகாண் சுகாதார சேவை ஒன்றிணைந்த முன்னணி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்னதாக கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

குறித்த கொடுப்பனவு தங்களுக்கு வழங்கப்படாவிட்டால் சகல தொழிற்சங்கங்களும் இணைந்து தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மகாவலி ஆற்றின் நீர்மட்டம் உயர்ந்ததால் வீதி மூடப்பட்டது!

கொழும்பு, ஜன. 11
மகாவலி ஆற்றின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதால், கொழும்பு- மட்டக்களப்பு மார்க்கத்தில், மனம்பிட்டிய - கல்லேல்ல பகுதி மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர் மழை காரணமாக மகாவலி ஆற்றின் நீர் மட்டம் அதிகரித்து வருவதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

# வற் வரி அதிகரிப்பை மேற்கொள்ள முறையான ஆய்வு செய்யவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 11

**நிதி தாக்கம் குறித்த முறையான, அறிவியல் பூர்வமான கணக்கெடுப்புகள் ஏதுமின்றியே தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் வற் வரியை 18 வீதமாக அதிக ரித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

வற் வரி உயர்வால் கிராமப் புற, நகர்ப்புற மற்றும் தோட் டப்புற சமூகங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து அரசாங்கம் தற்போது கணக்கெடுப்பு நடத் துவது ஆச்சரியமாக உள்ளது. முறையான நிதி நிர்வாகத்தில் வரிகளை விதிக்கும் அல்லது அகற்றும் முன் நிதி தாக்க மதிப் பீடு செய்யப்பட வேண்டும். அரசாங்கம் இவ்வாறான தொன்றை முன்னெடுக்க வில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

வற் வரியை அதிகரித்த பிறகு இதுபோன்ற கணக்கெடுப்பை மேற்கொள்வது கடும் பிரச்



னைக்குரிய விடயம். இதனால் சீனி, பருப்பு, மிளகாய், கீரி சம்பா, சம்பா போன்றவற்றின் விலை எவ்வாறு உயர்ந்துள்ளது என்பதை சந்தைக்குச் சென்று ஆராய்ந்து பார்க்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (அ)



# பண்டாரவளையில் மண்சரிவு புதையுண்டன 4 வாகனங்கள்

கொழும்பு, ஜன. 11

பண்டாரவளை, உடுஹூல் பொத்த பகுதியில் பண்டார வளை - பதுளை பிரதான வீதிக்கு மேலே உள்ள மண்மேடு சரிந்து வீதியில் விழுந்ததில் நான்கு வாகனங்கள் சேதமடைந்துள் ளன.

இரு வாகனங்கள் முழுமை யாக மண்ணுக்குள் புதையுண் டுள்ளன, இரு வாகனங்கள் பகு தியளவு சேதமடைந்துள்ளன.

நேற்று முற்பகல் 10 மணிய ளவிலேயே இந்த மண்சரிவு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரு சொகுசு வாகனங்கள், வான் மற்றும் ஓட்டோ வொன்றே இவ்வாறு மண்சரி வில் சிக்குண்டு சேதமடைந்துள் ளன.

இவ்வாறு சேதமடைந்த வாக னங்களுள் மூன்று, அப்பகுதி யில் உள்ள கராஜூக்கு வந்திருந் தவை எனவும், ஓட்டோ அவ்வ ழியாக பயணித்த வாகனம் என வும் தெரியவந்துள்ளது.

இரு வாகனங்கள் முழுமை யாக மண்ணுக்குள் புதையுண் டுள்ளன. இவ்வனர்த்தத்தில் எவ ருக்கும் காயம் ஏற்படவில்லை.

# புள்ளிவிவர திணைக்கள அறிக்கை; விவாதிக்க சந்தர்ப்பம் வேண்டும்!

## வாசுதேவ நாணயக்கார கோரிக்கை

கொழும்பு, ஜன. 11

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத் தின் அண்மைக்கால மதிப்பீட்டு அறிக்கையை பாராளுமன்றத் துக்கு முழுமையாக சமர்ப்பித்து அதுதொடர்பில் விவாதிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவேண் டும் என பாராளுமன்ற உறுப்பி னர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத் தின் அண்மைக்கால மதிப்பீட்டு தொடர்பில் பலரும் கருத்து தெரிவித்திருந்தனர். அதன் அறிக்கையின் பிரகாரம் நாட் டில் 60 வீதத்துக்கும் அதிகமா னவர்களின் வருமானம் குறைந் துள்ளதுடன் 92வீதமானவர்க ளின் வாழ்க்கைச் செலவு அதிக ரித்துள்ளது.

அதேபோன்று 37வீதமாக இருந்த வறுமை நிலை இந்த



மாத இறுதியாகும்போது அது 40 வீதமாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

பாராளுமன்றத்தில் நாங்கள் கோட் அணிந்து குளிரூட்டப் பட்ட அறையின் வாழ்க்கைச் செலவின் தன்மையும் இலட்சக் கணக்கான மக்களின் வாழ்க்கைச் செலவின் தன்மைக்குமிடையில் இருந்துவரும் வித்தியாசம் விசாலமானது. வறுமை நிலை பாரியளவில் அதிகரித்து வருகி றது.

அதனால் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கையை முழுமையாக சபைக்கு சமர்ப்பித்து அதுதொடர் பில் விவாதத்துக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அதற் காக ஆளும் எதிர்க்கட்சி அனை வரும் அதற்காக ஆதரவளிக்க முன்வரவேண்டும் என கேட் டுக்கொள்கிறேன்-என்றார். (அ)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு விரைவில் சம்பள அதிகரிப்பு

## ஜனாதிபதி ரணில் அர்ப்பணிப்புடன் செயல்படுவதாக அரசு தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 11

பெருந்தோட்டத் தொழிலா ளர்களுக்கு விரைவில் சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க செயல்பட்டு வருவதாக இரா ஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம் பலாப்பிட்டிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை எதிர்க்கட்சி உறுப்பினர் வேலுகுமார் குறுக் கீட்டு கேள்வியொன்றை எழுப்பி உரையாற்றும்போது, "பொது மக்களால் தாங்கிக் கொள்ள முடியாதளவு செலவு கள் உயர்ந்துள்ளன. குறிப்பாக வாழ்க்கைச் செலவுகள் மும்ம டங்காக உயர்ந்துள்ளன. இத னால் பெரிதும் பாதிக்கப்பட் டுள்ள மக்களாக பெருந்தோட் டத் தொழிலாளர்கள் உள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்க ளின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டுமென கடந்த காலத் தில் பல்வேறு தீர்மானங்கள்



எடுக்கப்பட்டிருந்தன. அண்மை யில் ஜனாதிபதியும் 1700 ரூபா சம்பள அதிகரிப்புக்கான கோரிக் கையை கம்பனிகளிடம் முன் வைத்திருந்தார். விரைவாக இந்த நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்." என கூறினார்.

இதற்கு பதில் அளித்த இரா ஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம் பலாப்பிட்டிய, "தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள அரச தலைவர் ஒருவர் நேரடி யாக தலையீடு செய்த முதல் சந்தர்ப்பமாக இது உள்ளது. நேற்றைய தினமும் முக்கிய பேச்சுவார்த்தையொன்று கம்ப னிகளுடன் நடைபெற்றது.

இந்த சந்திப்பில் கம்பனிக ளால் அதிகரிக்கக் கூடிய சம்பள தொகையை விரைவில் அறிவிக் குமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார். அரசாங்கம் விரை வாக தோட்டத் தொழிலாளர் களுக்கு சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள நடவடிக்கைகளை எடுக்கும்."-என்றார். (அ)

# யாழில் அழகுக்கலை நிலையங்களை திறப்பதற்கு கடுமையான கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்.மாவட்டத்தில் அழகுக் கலை நிலையங்களை புதிதாக திறப்பதற்கும் அழகு கலை சார்ந்த பயிற்சி நெறிகளை நடத் துவதற்கும் கடுமையான கட் டுப்பாடுகளை உள்ளூராட்சிச் சபைகளோடு இணைந்து நடை முறைப்படுத்த உள்ளதாக யாழ். மாவட்ட அழகுக்கலை நிபுணர் கள் ஒன்றியத்தின் தலைவர் பிரதீபா டினேஸ் தெரிவித் தார்.

யாழ். மாவட்ட அழகுக்கலை நிபுணர்கள் ஒன்றியம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ஒன்றியத்தின் தலைவர் பிரதீபா தினேஷ் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

அண்மைக் காலங்களில் யாழ்ப்பாணத்தில் அழகுக்கலை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் எதுவும் இன்றி புதிய அழகுக்கலை நிலை யங்கள் பரவலாக திறக்கப்படுவ தாக குற்றச்சாட்டுகள் எழுந்துள் ளன.

அதுமட்டுமின்றி யாழ்ப்பா ணம் தவிர்ந்த பிரதேசங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் வருகைதந்து யாழ்ப் பாணத்தில் புதிய அழகுக்கலை நிலையங்கள் திறக்கப்படுவது மட்டுமில்லாமல் அழகுக்கலை சார்ந்த குறிகியகால பயிற்சிப் பட்டறைகளும் தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றன.

இதனால் எமது உள்ளூர் அழகுக்கலை ஆர்வம் கொண்ட மாணவர்களும் அழகுக்கலை நிபுணர்களும் பாதிக்கப்படுவ தாக குற்றச்சாட்டுகள் எழுந்துள் ளன.

இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே யாழ் அழகுக் கலை நிபுணர்கள் ஒன்றியம் குறித்த கட்டுப்பாடுகளை நடை முறைப்படுத்தியுள்ளது.

எமது ஒன்றியத்தில் யாழ்ப் பாணத்தில் இயங்குகின்ற 120 இற்கும் மேற்பட்ட அழகுக் கலை நிலையங்கள் பதிவு செய் யப்பட்டுள்ளன.

இந்த ஒன்றியமானது யாழ். மாவட்ட செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு மாவட்ட செய லகத்தின் வழிநடத்தலில் இயங்கி வருகின்றது.

இந்நிலையில் அழகுக்கலை தொழில் என்பது சருமங்கள், தோல் சார்ந்த சுகாதார விடயங் களோடு சம்பந்தப்படுவதால் உள்ளூராட்சி மன்றங்களின் சுகாதார பிரிவினரோடு இணைந்து அதற்கான அனுமதி வழங்குவ தில் கடுமையான கட்டுப்பாடு களை நடைமுறைப்படுத்துவ தற்கு ஒன்றியம் தீர்மானித்துள் ளது.

குறிப்பாக அழகுக்கலை நிலையம் ஒன்றை திறப்பதற் கான வியாபார அனுமதியை வழங்குகின்றபோது குறித்த நிலையத்தின் உரிமையாளர் என்.வி.கியூ. நிலை 4 சான்றி தழை பெற்றிருப்பது கட்டாய மானது. இதனை பரிசீலித்தே வியாபார சான்றிதழ்கள் வழங் கப்பட வேண்டும் என யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங் களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளோம்.

அழகுக்கலை பயிற்சிநெறி களை நடத்துவதென்றால் வகுப் பறை கட்டமைப்பு கட்டாயம் அமைக்கப்படவேண்டும்-என் றார். (அ)

# மட்டக்களப்பில் வெள்ளம் 2,319 குடும்பங்கள் பாதிப்பு

**மட்டக்களப்பு, ஜன. 11**
**மட்டக்களப்பு மாவட்டத்தில் வட கீழ் பருவப் பெயர்ச்சி மழை தொடராக பெய்து வருவதனால் கடந்த 48 மணித்தியாலங்களின் மாவட்டத்திலுள்ள குளங்கள், ஆறுகளின் நீர் மட்டம் அதிகரித்ததுடன், மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் வெள்ள நீர் புகுந்துள்ளது.**



கிரான், புலி பாய்ந்தகல் மற்றும் கின்னயடி, பிரம்படித்தீவு, ஈரல்குளம், மயிலவட்டுவான், வாகரை கல்லரிப்பு பகுதிகளுக்குச் செல்லும் பாதை முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் படகுச் சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

மாவட்டத்தின் கோரளைப் பற்று வடக்கு வாகரையில் 393 குடும்பங்கள், மண்முனை வடக்கு பகுதியில் 33 குடும்பங்கள், களுவாஞ்சிக்குடி பகுதியில் 7 குடும்பங்கள், மண்முனை, தென் மேற்கு பட்டிப்பளை பகுதியில் 10 குடும்பங்கள், போரதீவுப் பற்று வெல்லாவெளி பிரதேச செயலக பகுதியில் 290 குடும்பங்கள், உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளன.

காத்தான்குடியில் 1498 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு 7 குடும்பங்கள் காத்தான்குடி பதுரியா வித்தியாலயத்திலும், எறாவூர் பற்று செங்கலடி பகுதியில் 88 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு 27 குடும்பங்கள் எறாவூர் - 4 கோயில் மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளன.

வவுணதீவு மண்முனை மேற்கு பகுதியில் படகில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் காணாமல் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதேசங்களில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்ததுடன், பெரும்பாலான வீதிகளும் வெள்ள நீரால் நிறைந்துள்ளதுடன், பிரதான கால்வாய்கள், ஆறுகள், மற்றும் தாழ்நில பிரதேசங்களில் உள்ள மற்றும் போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(அ)

# மருத்துவர் ஹில்மியின் சேவைக்குப் பாராட்டு




அம்பாறை, ஜன. 11

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் சுமார் 09 மாதங்கள் பொது சுகாதாரம் மற்றும் தர முகாமைத்துவ பிரிவுகளின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக கடமையாற்றி பிராந்திய சுகாதாரத்துறைக்கு அளப்பெரிய சேவையாற்றியமைக்காக சாய்ந்தமருதைச் சேர்ந்த மருத்துவர் எம்.ஏ. எம்.ஹில்மி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்களினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

பொது சுகாதார மற்றும் தர முகாமைத்துவ பிரிவுகளின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய மருத்துவர் எம்.ஏ.எம்.ஹில்மி சமூக வைத்திய நிபுணர் பட்டமேற்படிப்புக்காக செல்வதனையிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்த சேவை நலன் பாராட்டு விழா கடந்த திங்கட்கிழமை பிராந்திய பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிராந்திய பிரிவு தலைவர்கள், பிராந்திய பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

(அ)



# போதைப்பொருட்களை வைத்திருந்த மூவர் நிந்தவூர் பொலிஸாரால் கைது!

அம்பாறை, ஜன. 11

போதைப்பொருட்களை சூட்சுமமாக தம்வசம் வைத்திருந்த மூவரை நிந்தவூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போது பெருந்தொகையான பணம், போதைப் பொருள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எம். நஜீப் வழிநடத்தலில் இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இச்சுற்றிவளைப்பு தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் கைது செய்யப்பட்ட 32, 33, 34 வயதுடைய 3 சந்தேக நபர்களிடம் தொடர்ந்தும் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# அம்பாறை மாவட்டத்தின் இலக்கிய விருது வழங்கல்

அம்பாறை, ஜன. 11

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட செயலகம் தமிழ் மொழி மூல 13 பிரதேச செயலகங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்த அம்பாறை மாவட்ட இலக்கிய விருது வழங்கும் விழா 2023 மற்றும் சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கும் விழா மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் ரீ.எம். ரிம்ஸான் நெறிப்படுத்தலில் அட்டாளைச் சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ஏ. சாபீர் தலைமையில் அட்டாளைச் சேனை தனியார் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம கலந்து சிறப்பித்ததோடு கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் கலந்து கொண்டார்.

மேலும் விசேட அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட மாவட்ட நீதவான் எம்.எச்.எம். ஹம்ஸா, சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி டி.கருணாகரன், காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல்.எம். ஹனிபா, நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர். ராகுல நாயகி, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம். அன்ஸார், இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ஏ. நஸீல், சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முஆபிக்கா, அம்பாறை மாவட்ட உதவிச் செயலாளர் வி. செனவிரத்ன, கிழக்கின் கேடயம் பிரதானி எஸ்.எம். சபீஸ், பிரதேச செயலகங்களின் கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்விமான்கள், சிரேஷ்ட கலைஞர்கள், அரச அதிகாரிகள், மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




தமிழ், முஸ்லிம் மக்களின் கலாசாரங்களை பிரதிபலிக்கும் கலை, இலக்கிய நிகழ்வுகள் எல்லோரையும் கவரும் வகையில் இங்கு அரங்கேற்றப்பட்டதோடு, அம்பாறை மாவட்டத்தில் கலாசார நிகழ்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்கள், கலைஞர்களுக்கு சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

(அ)

# பலத்த மழைக்கு மத்தியில் இரவு 2 மோட்டார் சைக்கிள்கள் திருட்டு

அக்கரைப்பற்று, ஜன. 11

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கண்ணகி கிராமத்தில் வீடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் கடந்த திங்கள் இரவு பெய்துகொண்டிருந்த பலத்த மழையின்போது திருடிச் செல்லப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

களவாடப்பட்ட மோட்டார் சைக்கிளிலொன்று அருகிலுள்ள வீதி ஓரத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும், சிலவேளை அது இயங்காமலிருந்திருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பல்சர் ரக மோட்டார் சைக்கிளை திருடர்கள் எடுத்துச் சென்றிருக்கலாம் எனவும் இச்சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# திடீரென கவிழ்ந்த படகு உயிர் தப்பினார் மீனவர்

மட்டக்களப்பு, ஜன. 11

காத்தான்குடி - ஏத்துக்கால் கடற்கரையில் இருந்து மீனவர் ஒருவர் படகு ஒன்றில் மீன்பிடிப்பதற்காக கடந்த திங்கட்கிழமை அதிகாலை கடலுக்குச் சென்று மீண்டும் கரையை நோக்கி வரும்போது, கரையில் இருந்து சற்று தூரத்தில் குறித்த மீன்பிடிப் படகு கவிழ்ந்து மீனவர் கடலில் விழுந்துள்ளார்.

இதனைக்கண்ட கரையில் நின்ற மீனவர்கள், குறித்த மீனவரை காப்பாற்றியதுடன், மீன்பிடிப் படகையும் மீட்டனர்.

இச்சம்பவத்தில் மீன்பிடிப் படகுக்கு மற்றும் மீன்பிடி படகின் இயந்திரத்திற்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர். (அ)

## கடும் பொருளாதார நெருக்கடி:

# எரிபொருள்களின் விலையை 5 மடங்காக அதிகரித்த கியூபா

ஹவானா, ஜன. 11

**எரிபொருள் விலையினை ஐந்து மடங்காக அதிகரிப்பதாக கியூபா அறிவித்துள்ளது.**

**கியூபா அரசாங்கம் எரிபொருள் மற்றும் கடுமையான பொருளாதார நெருக்கடியுடன் போராடி வரும் நிலையில் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.**



அதன்படி, எதிர்வரும் பெப்ரவரியில் இருந்து ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 25 கியூப பெசோவில் இருந்து, 132 பெசோவாக அதிகரிக்கப்படவுள்ளது.

டீசல் மற்றும் ஏனைய எரி பொருட்களின் விலையும் அதிகரிக்கப்படும் என்று கியூப நிதி அமைச்சர் விளாடிமிர் ரெகுரோ குறிப்பிட்டுள்ளார்.

குடியிருப்புப் பகுதிகளில் உள்ள முக்கிய நுகர்வோருக்கு 25வீ மின்சார விலையை உயர்த்துவதாகவும், இயற்கை எரிவாயுக்கான விலையை உயர்த்துவதாகவும் அவர் அறிவித்தார்.

வாழ்க்கை சுமையினால் பல நெருக்கடியினை எதிர்கொண்டுள்ள கியூப மக்களுக்கு இந்த அறிவிப்பு பலத்த அடியாக அமைந்துள்ளது.

அதேநேரம், சர்வதேச சந்தைகளில் எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு வெளிநாட்டு நாணயத்தை திரட்டுவதற்காக அமெரிக்க டொலரில் மட்டுமே பணம் செலுத்தும் 29 புதிய பெற்றோல் நிலையங்களை அரசாங்கம் திறக்கும் என்றும் கியூப நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# இஸ்ரேல் அழிக்கப்படும்!

## ஈரான் உயர் தலைவர் சபதம்



தெஹ்ரான், ஜன. 11

இஸ்ரேல் கண்டிப்பாக அழிக்கப்படும். ஆனால் இஸ்ரேல் செய்த குற்றங்கள் வரலாற்றில் அழிந்திடாது என ஈரான் உயர் தலைவர் அயதுல்லா அலி கமேனி தெரிவித்துள்ளார்.

குவோம் நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அயதுல்லா 'யூதர்களின் ஆட்சி முடிவுக்கு வரும், கடவுளின் உதவியோடு அவர்கள் இந்த உலகில் அழிக்கப்படுவார்கள், ஆனால் அவர்கள் செய்த குற்றங்கள் வரலாற்றில் நீங்கா இடத்தைப் பெறும்' எனத் தெரிவித்துள்ளார்.

'ஒரு நாள் வரலாற்றில், யூதர்கள் இந்தப் பகுதியை ஆட்சி செய்ய ஆரம்பித்தார்கள். இங்கிருந்த மக்களைக் கொன்று பல குற்றங்களைச் செய்தார்கள். பல லாயிரக்கணக்கான குழந்தைகளையும் பெண்களையும் கொன்றுகுவித்தார்கள் என எழுதுவார்கள்' எனவும் கூறியுள்ளார்.

'நடப்பவற்றைக் கூர்ந்து கவனிப்பவர்களுக்குத் தெரியும், இஸ்ரேல் விரைவில் தோற்கப் போகிறது, பாலஸ்தீனர்கள் வெறியடையப்போகிறார்கள்' என்றும் அயதுல்லா அலி கமேனி தெரிவித்துள்ளார். (அ)

# பிரான்ஸின் புதிய பிரதமராக கேப்ரியல் அட்டல் நியமனம்!

## மிகவும் இளம் வயது பிரதமராக அங்கீகாரம்



பாரிஸ், ஜன. 11

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் நாட்டின் கல்வி அமைச்சர் கேப்ரியல் அட்டலை பிரதமராக நியமித்துள்ளார். இதன் மூலம் 34 வயதான அவர் பிரான்ஸின் இளைய பிரதமர் என்ற அங்கிகாரத்தைப் பெற்றுள்ளார்.

எலிசபெத் போர்ன் பிரதமர் பதவியை இராஜினாமா செய்த பின்னர் அந்தப் பதவிக்கு கேப்ரியல் அட்டல் நியமிக்கப்பட்டுள்ளார்.

எலிசபெத் போர்ன் இரண்டு வருடங்களுக்கும் குறைவான பதவியில் இருந்ததுடன், பரவலாக எதிர்பார்க்கப்பட்ட அமைச்சரவை மறுசீரமைப்பிற்கு முன்னதாக தனது பதவியை இராஜினாமா செய்தார்.

“பிரான்ஸ் குடியரசின் ஜனாதிபதி கேப்ரியல் அட்டலை பிரதமராக நியமித்தார், மேலும் அவருக்கு அரசாங்கத்தை அமைக்கும் பணியை வழங்கினார்” என்று ஜனாதிபதியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள கேப்ரியல் அட்டலுக்கு பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

யார் இந்த கேப்ரியல் அட்டல்?

கோவிட் தொற்றின்போது அரசாங்க செய்தித் தொடர்பாளராக இருந்த கேப்ரியல் அட்டல் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் நெருங்கிய நண்பர் ஆவார்.

சமீபத்திய கருத்துக் கணிப்புகளில் நாட்டின் மிகவும் பிரபலமான அரசியல்வாதிகளில் ஒருவரான அவர், வானொலி நிகழ்ச்சிகளிலும் பாராளுமன்றத்திலும் எளிதான ஒரு அறிவார்ந்த அமைச்சராக பெயர் எடுத்தார்.

# 2023ஐ விட மிகவெப்பமான ஆண்டாக 2024 பதிவாகும்!

## எச்சரிக்கும் விஞ்ஞானிகள்

நியூயோர்க், ஜன. 11

2024 ஆம் ஆண்டு மிகவும் வெப்பமான ஆண்டாக இருக்கும்.அந்த வெப்பம் வரலாற்றில் மிக அதிக வெப்பமான ஆண்டாகப் பதிவிடப்பட்ட 2023ஐ விட இன்னும் அதிகமாக இருக்கும் என்று அறிவியலாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

அருவநிலை மாற்றம்தான் மூலக் காரணம் என்றாலும் புதைப்படிவ எரிபொருளை எரிப்பதால் வெளியாகும் வாயுக்கள் காற்றில் கலப்பதால், அது உலகளாவிய சராசரி வெப்ப நிலையை அதிகரிக்கச் செய்யும் என்று கூறப்படுகிறது.

2023 இன் வெப்பநிலை, தொழில்துறைக்கு முந்தைய காலத்தில் இருந்ததைவிட 1.4 பாகை செல்சியஸ் அதிகமாக இருந்தது.

அது இந்த ஆண்டில் 1.3 பாகை செல்சியசிலிருந்து 1.6 பாகை செல்சியஸ் வரை அதிகரிக்கும் என்று கணிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு வெப்பம் அதிர்ச்சியளிக்கக்கூடியதாக இருந்தது.

2023இ அன் ஒவ்வொரு மாதமும் 1991-2000 வரையிலான சராசரி வெப்பத்தைக் காட்டிலும் அதிகமாக இருந்தது. அதன்



பின்னர் ஜூன், ஜூலை, ஒகஸ்ட், செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர் மாதங்களின் வெப்பநிலை, வரலாற்றில் அந்தந்த மாதத்திலிருந்து வெப்பநிலையைக் கடந்து இருந்தது.

கடந்த ஆண்டில் ஜூலை மாதம்தான் அதிக வெப்பமான மாதமாகவும் ஜூலை 6 ஆம் திகதி ஆக வெப்பமான நாளாகவும் பதிவானது.

பசுபிக் பெருங்கடலின் வெப்பம் கிழக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதால், காற்றின் திசை மாற்றம், பெருங்கடல் வெப்பச்சலனம், மழைப்பொழிவு ஆகியவை பூமியில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என பெருங்கடல் ஆய்வில் ஈடுபட்டுள்ள டாக்டர் உல்லா ஹீடி தெரிவித்தார்.

இந்தப் பருவநிலை மாற்றங்கள் வேளாண் துறையையும் பாதிக்கக்கூடும். கிழக்கு ஆசியா, தெற்கு ஆப்பிரிக்கக் கண்டம், மத்திய அமெரிக்கா ஆகிய பகுதிகளில் காணப்படும் வறட்சியால், 2024 இல் உணவு பாதுகாப்பின்மை ஏற்படலாம் என்று ஐக்கிய நாட்டு உணவு, வேளாண் அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

எல் நினோ பருவநிலை மாற்றம் அமேசான் பகுதியில் வறண்ட வானிலையைக் கொண்டு வந்துள்ளது. அது தெற்கு-கிழக்கு பிரேசிலிலும் அண்டை உருகுவேயிலும் அதிக மழைப் பொழிவைக் கொண்டு வரலாம் என்றார் தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகத்தின் மூத்த அறிவியலாளர் டாக்டர் மைக்கல் மெக்ஃபெடன் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# தாதியின் அலட்சியம் 10 பேர் உயிரிழப்பு!

தாதியின் அலட்சியதால் 10 பேர் உயிரிழந்த சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் உள்ள மெட்ஃபோர்ட் பகுதியில் அமைந்துள்ள ஒரேகான் வைத்திய சாலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வைத்திய சாலையில் கடந்த மாதம் தொடக்கத்தில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகள் 10 பேர் திடீரென ஏற்பட்ட தொற்றுக் காரணமாக அடுத்தடுத்து உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில் இது குறித்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், குறித்த வைத்திய சாலையில் பணியாற்றும் தாதியொருவர் நோயாளிகளுக்கு செலுத்த வேண்டிய வலி நிவாரிணியான ஃபெண்டானில் மருந்தைத் திருடி, அதற்கு பதிலாக குழாய் நீரை நிரப்பி வைத்திருந்தமை தெரிய வந்துள்ளது.

இதன் காரணமாகவே தொற்று ஏற்பட்டு குறித்த



நோயாளிகள் இறந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுகின்றது. இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 36,385 பட்டதாரி ஆசிரியர்களை விரைவில் நியமிக்க நடவடிக்கை

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 11

**தேசிய மற்றும் மாகாண மட்ட பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 36 ஆயிரத்து 385 பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.**

அத்துடன் 14,385 மாகாண மட்ட ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பிலும் மேலும் 21,000 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிப்பது தொடர்பிலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான விசாரணைகள் இந்த வாரத்தில் இடம்பெற்று அதற்கான தீர்ப்பு கிடைத்ததும் உடனடியாகவே அந்த நியமனங்களை வழங்குவது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆசிரியர்களுக்கான வெற்றிடம் காணப்படுவதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுள்ளமை விடுமுறையில் சென்றுள்ளமை மற்றும் ஆசிரியர்கள் பதவி விலகியுள்ளமை உள்ளிட்ட காரணங்களால் ஆசிரியர் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

அந்த வகையில் அதிகளவு ஆசிரியர் வெற்றிடங்கள் மாகாண மட்ட பாடசாலைகளிலேயே காணப்படுகின்றன. அந்த வகையில் மாகாண மட்ட பாடசாலைகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ், சிங்கள, ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகள் நியமிக்கப்படவுள்ளனர். 60 வயது நிறைவடைந்துள்ள நிலையில் 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் 6018பேர் ஓய்வு பெற்றுள்ளனர்.

அத்துடன் அமைச்சரவை தீர்மானத்தின்படி பதவியை இராஜினாமா செய்தமை, விடுமுறையில் சென்றுள்ளமை மற்றும் ஓய்வு பெற்றுள்ளமை காரணமாக மாகாண மட்டத்தில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரினால் அனைத்து மாகாணங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கு இவ்வாறு இணைத்துக்கொள்ளப்படுவதற்கான அறிவிப்பு விடுக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் மேல் மாகாணத்திற்கு 5000 பட்டதாரி ஆசிரியர்களும் தென் மாகாணத்திற்கு 1028, மத்திய மாகாணத்திற்கு 1067, வடமத்திய மாகாணத்திற்கு 1408, வடமேல் மாகாணத்திற்கு 665, ஊவா மாகாணத்திற்கு 590, சப்ரகமுவ மாகாணத்திற்கு 877 என மொத்தமாக 10,635 ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அது தொடர்பில் அறிவிப்பு செய்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு பரீட்சை நடத்தப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு நியமனம் வழங்குவதற்கு முற்படுகையில் நீதிமன்றத்தில் அதற்கு எதிராக மனு



தாக்கல் செய்யப்பட்ட நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதால் இரண்டு வழக்குகள் தொடர்பில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் 10 ஆயிரத்து 635 பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதற்கு மேலதிகமாக விஞ்ஞானம், கணிதம், மொழி, சர்வதேச மொழி, தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்காக 5450 பட்டதாரிகளை இணைத்துக்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்தது. அவற்றில் 1700 பட்டதாரிகள் தேசிய பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை நிறைவு பெற்றதும் இந்த நியமனங்களை வழங்குவதற்கான நேர்முக பரீட்சை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை 21,000 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் நீதிமன்ற தடை உத்தரவு காரணமாக அது தடைப்பட்டது. அது தொடர்பான வழக்கு தீர்ப்பு விரைவில் கிடைத்ததும் அவர்களையும் ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (அ)

# நாட்டுக்குத் தேவையான பால் உள்நாட்டிலேயே இனி உற்பத்தி

கொழும்பு, ஜன. 11

நாட்டுக்குத் தேவையான பால் உற்பத்திக்காக சிறிய மற்றும் நடுத்தர பண்ணையாளர்களைப் வலுப்படுத்துவதற்கு விவசாயத் திணைக்களம் தற்போது நடவடிக்கை எடுத்து வருவதாக கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ.பி. ஹேரத் தெரிவித்தார்.

தற்போதுள்ள 06 பால் உற்பத்தி நிலையங்களுக்கு மேலதிகமாக மேலும் இரண்டு உற்பத்தி நிலையங்களைத் திறப்பதற்கு அவசியமான பேச்சுவார்த்தைகள் பிரான்ஸ் அரசாங்கத்துடன் நடத்தப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ.பி ஹேரத் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டிற்குத் தேவையான பால் உற்பத்தியில் நாம் இன்னும் தன்னிறைவு அடையவில்லை. தேசிய தேவையில் 40 வீதம் மாத்திரமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது.

எஞ்சிய 60 வீதம் இறக்குமதி செய்வதற்கு 34 பில்லியன் ரூபாவுக்கு மேல் செலவிட வேண்டியுள்ளது. ஆண்டுக்கு எழுநூற்று ஐம்பது மில்லியன் லீற்றர் பால் தேவைப்பட்டாலும், 350 மில்லியன் லீற்றர் மாத்திரமே உற்பத்தி செய்கிறோம்.

தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு, பால் உற்பத்திக்கு சிறிய மற்றும் நடுத்தர பண்ணையாளர்களை வலுப்படுத்த விவசாய திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும், பால் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் பிரான்ஸ் நாட்டின் ஆதரவுடன் 06 பால் உற்பத்தி நிலையங்கள் ஆரம்பிக்கப்



பட்டன. வாரியபொல, வென்னப்புவ, அத்தனகல்ல, கொழும்பு மற்றும் பொலனறுவை ஆகிய இடங்களில் உற்பத்தி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் அண்மையில் நாவலப்பிட்டியில் இவ்வாறான பால் உற்பத்தி நிலையம் ஒன்று திறக்கப்பட்டது. இத்தொழிற்சாலைக்கு தேவையான பால் பதப்படுத்தும் உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கும், உள்நாட்டுத் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கும் பிரான்ஸ் அரசாங்கம் 600 இலட்சம் ரூபா உதவி வழங்க இருக்கிறது.

இதற்குத் தேவையான கட்டிடங்கள் மற்றும் ஏனைய நிர்மாணங்களுக்காக நாவலப்பிட்டி பல்நோக்கு சேவைகள் கூட்டுறவுச் சங்கம் 60 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது.

இந்த தொழிற்சாலையில் ஒரு நாளைக்கு 5000 லீற்றர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது.

அத்துடன் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களில் இவ்வாறான தொழிற்சாலைகளை ஆரம்பிக்க உதவுமாறு பிரான்ஸ் அரசாங்கத்திற்கு எமது அமைச்சு பரிந்துரைத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 250 மில்லியன் ரூபாவை பால் உற்பத்தி மற்றும் மேம்பாட்டுக்காக ஒதுக்கியுள்ளார். குறிப்பாக ஆடு வளர்ப்பை ஊக்குவிப்பதற்காக 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# இலங்கைக் குரங்குகளுக்காக தொடர்ந்து காத்திருக்கும் சீனா

கொழும்பு, ஜன. 11

சீனாவில் உள்ள பல தனியார் மிருகக்காட்சிசாலைகள் இலங்கையில் உள்ள குரங்குகளைக் கொள்வனவு செய்யக் காத்திருக்கின்றன என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் உரையாற்றிய போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

சீனாவில் சுமார் 20 ஆயிரம் தனியார் உயிரியல் பூங்காக்கள் இருக்கின்றன எனவும் துரதிர்ஷ்டவசமாக இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அனுமதிக் கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக சுமார் ஒரு லட்சம் செந்நிற குரங்குகளை அனுப்ப தயாராகியிருந்தோம் எனவும் அவர் குறிப்பிட்டார். பெருமளவிலான குரங்குகள் விவசாயிகளின் பயிர்களை சேதப்படுத்துகின்றன, அதற்காக பாதுகாப்பு அமைச்சும் வனவிலங்கு அமைச்சும் ஒன்றிணைந்து இப்பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும் எனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர வலியுறுத்தினார். (அ)

# பெண் ஊழியர் தாக்கி கொலை; கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

கொழும்பு, ஜன. 11

கஹதுடுவ அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலுக்கு அருகில், சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பெண் ஊழியரை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த சந்தேக நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று காலை கைது செய்யப்பட்டதாக கஹதுடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட பிலியந்தலை, மடபட ஜம்புரலிய பிரதேசத்தில் வசிக்கும், ஒரு பிள்ளையின் தாயான துலாஞ்சலி அனுருத்திகா, வைத்தியர் ஒருவரின் மனைவியாவார்.

கொலைக்கு பின்னர் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்வதற்காக சந்தேகநபர் விமான நிலையத்துக்கு வந்தபோது கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியின் சகோதரன் மற்றும் போதைப்பொருள் வியாபாரி என பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து சந்தேகநபருக்கு பயணத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

கொலை செய்ய பயன்படுத்திய கூரிய ஆயுதங்கள் மற்றும் அதற்கு பயன்படுத்திய கார் என்பன தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சின்னம்மை தடுப்பூசி திட்டம் 83 வீதம் வெற்றி!

கொழும்பு, ஜன. 11

சின்னம்மை தடுப்பூசி திட்டம் 83 வீதம் வெற்றியடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய நிபுணர் பாலித மஹிபால தெரிவித்தார்.

6 முதல் 9 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட சின்னம்மை தடுப்பூசி திட்டமே வெற்றியடைந்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இதன்படி சின்னம்மை தடுப்பூசித் திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் 93 வீதமும், கண்டி மாவட்டத்தில் 90 சத வீதமும், குருநாகல் மாவட்டத்தில் 88.7 வீதமும் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளன.

தடுப்பூசி போடவேண்டிய 30,455 குழந்தைகள் இன்னும் இருப்பதுடன், அவர்களில் 25,286 பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டனர்.

தடுப்பூசி போடவேண்டிய குழந்தைகளுக்கு எதிர்வரும் மூன்று வாரங்களில், சனிக்கிழமைகளில் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் அப்போது நூற்றுக்கு நூறு வீதம் முழுமையாக இதனை அனைத்து குழந்தைகளுக்கும் வழங்க முடியும் என்றும் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விஜயசிறி 225 எம். பிக்களையும் விஜசிறி காட்டிக்கொடுத்துள்ளார்

## மகிந்தானந்த அளுத்கமகே

கொழும்பு, ஜன. 11

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டுக் கொடுக்க 90 கோடி ரூபாயை பெற்றுக்கொண்டு அவுஸ்திரேலியாவில் குடும்பத்துடன் வசிப்பதற்கு சமிந்த விஜயசிறி 225 உறுப்பினர்களையும் காட்டிக் கொடுத்துள்ளார்.

இவரின் கருத்துகளால் மக்கள் பிரதிநிதிகள் மலினப்படுத்தப்பட்டுள்ளார்கள். ஆகவே, விசேட கவனம் செலுத்துங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே சபாநாயகரிடம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

தனது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப முடியவில்லை, வீதியில் செல்ல முடியவில்லை என்று குறிப்பிட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி நேற்று (நேற்று முன்தினம்) பாராளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்தார்.

எமக்கு எந்த பிரச்னையும் இல்லை. நாங்கள் வீதியில் செல்கிறோம்,மக்களை சந்திக்கிறோம். இவர் குறிப்பிட்ட விடயங்களை மேற்கோள்காட்டி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இவர் குறிப்பிட்ட கருத்துக்கள் ஒட்டுமொத்த பாராளுமன்ற உறுப்பினர்களையும் மலினப்படுத்தும் வகையில் உள்ளன.

வெற்றிடமாகியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளவர் இரட்டை குடியுரிமையினை கொண்டுள்ளார். 900 இலட்சம் ரூபாயை பெற்றுக்கொண்டு இவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டுக் கொடுத்துள்ளார்.

இரட்டை குடியுரிமை உடையவர் பாராளுமன்றத்துக்கு வருவதற்கும், அவுஸ்ரேலியாவில் குடும்பத்துடன் வாழ்வதற்கும் இவர் 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் காட்டிக் கொடுத்துள்ளார். இவர் குறிப்பிட்ட கருத்துக்கள் பாரதூரமானது ஆகவே விசேட கவனம் செலுத்துங்கள் - என்றார்.

(ஐ)

# அஸ்வெசும பெறுவோர் தொகையை 24 இலட்சமாக அதிகரிக்க தீர்மானம்!

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க

கொழும்பு, ஜன. 11

அஸ்வெசும பயனாளர் குடும்பங்களின் எண்ணிக்கையை 24 இலட்சம் வரை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பான யோசனை, ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய அமைச்சரவைக்கு முன்வைக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

தற்போது 14 இலட்சம் குடும்பங்களுக்கு அஸ்வெசும கொடுப்பனவு வழங்கப்படுகிறது. முன்னதாக 20 இலட்சம் குடும்பங்களுக்கு அஸ்வெசும கொடுப்பனவை வழங்க திட்டமிடப்பட்டிருந்ததாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அமைச்சுக்கு கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளில் 60 வீதமானவை தொடர்பில் இதுவரை ஆராயப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பான தீர்வு இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கூறினார்.

ஜனவரி இறுதியில் அல்லது பெப்ரவரி முதல் வாரத்திற்குள் அஸ்வெசும கொடுப்பனவிற்கான புதிய விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதுடன், இதன் போது மேலதிகமாக 4 இலட்சம் பயனாளர்கள், நலன்புரி செயன்முறைக்குள் உள்ளடக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(ஐ)

# “யுக்திய நடவடிக்கையால் குற்றங்கள் குறைந்தன!”

கொழும்பு, ஜன. 11

போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ‘யுக்திய’ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட கடந்த டிசெம்பர் 17 ஆம் திகதி முதல் குற்றச்செயல்கள் கணிசமானளவு குறைந்துள்ளன என்று குற்றப்பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காலிங்க ஜயசிங்க நேற்று தெரிவித்தார்.

கொலை, பாலியல் துஷ்பிரயோகம், வீடு உடைத்தல், வாகனங்களை கொள்ளையிடுதல் போன்ற பல குற்றங்கள் மற்றும் வன்முறைகள் குறைவடைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

# வற் வரி அதிகரிப்பால் பாரதூரமான பிரச்னை

## சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜன. 11

எந்தவித மதிப்பீட்டு நடவடிக்கையையும் மேற்கொள்ளாமலே அரசாங்கம் வற் வரி அதிகரிப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. இது பாரதூரமான பிரச்னையாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அரசாங்கம் வற் வரியை நூற்றுக்கு 18 வீதத்தால் அதிகரித்திருக்கிறது. ஆனால், இந்த அதிகரிப்பால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பாக அரசாங்கத்துக்கு முறையாக பதில் தெரிவிக்காமல் இருக்கிறது.

ஏனெனில் வற் வரி அதிகரிப்பு மேற்கொள்ளும்போது அதுதொடர்பாக எந்த மதிப்பீட்டு நடவடிக்கையும் மேற்கொள்ளாமலே இதனை அரசாங்கம் செய்திருக்கிறது.

வற் வரியை அதிகரித்த பிறகு இது போன்ற கணக்கெடுப்பை மேற்கொள்வது கடும் பிரச்சினைக்குரிய விடயமாகும். வற்வரி அதிகரிப்பதற்கு முன்னர் இதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பாக மதிப்பிட்டு ஆராய்ந்த பின்னரே இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் வற் வரி உயர்வால் கிராமப்புற, நகர்ப்புற மற்றும் தோட்டப்புற சமூகங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து அரசாங்கம் தற்போது கணக்கெடுப்பு நடத்துவது ஆச்சரியமாக உள்ளது. முறையான நிதி நிர்வாகத்தில் வரிகளை விதிக்கும் அல்லது அகற்றும் முன் நிதி தாக்க மதிப்பீடு செய்ய வேண்டும். ஆனால் அரசாங்கம் இவ்வாறானதொன்றை முன்னெடுக்கவில்லை.

அத்துடன் வற் வரி அதிகரிக்கப்பட்ட போது பொருட்களின் விலை அதிகரிக்கப்படவில்லை என அரசாங்கம் தெரிவிக்கிறது. ஆனால் சந்தையில் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டிருப்பது அரசாங்கத்துக்கு தெரியாமல் இருக்கிறது.

அதனால் சீனி,பருப்பு,மிளகாய்,கீரி சம்பா,சம்பா போன்றவற்றின் விலை எவ்வாறு உயர்ந்துள்ளது என்பதை சந்தைக்குச் சென்று ஆராய்ந்து பாருங்கள் - என்றார்.

### மட்டக்களப்பில்...

நிற்பதால் அந்த வீதி மூடப்பட்டுள்ளது.

இதேபோன்று புலிபாய்ந்தகல், கிண்ணயடி, பிரம்படி தீவு பகுதிகளுக்கான வீதிப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், படகு போக்குவரத்து இடம்பெறுகின்றது. தவிர, செங்கலடியில் ஈரலக்குளம், மயிலவெட்டுவான், சித்தாண்டி முதல் பெருமாவெளி வரையான போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

நேற்று மாலை வரையான 24 மணி நேரத்தில் வாகனேரியில் 174 மி. மீ. மழைவீழ்ச்சி பதிவாகியது. இதே போன்று, மயிலாம்பாவெளியில் 130 மி. மீ., தும்பங்கேணி 112 மி. மீ., உருகாமம் 103.9 மி. மீ. உன்னிச்சை 102 மி. மீ. மட்டக்களப்பு 99.4 மி. மீ. கட்டுமுறிவுக்குளம் 98மி.மீ. மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளன. கடும் மழையால் பல குளங்கள் வான்பாய்கின்றன.

இதேவேளை, அம்பாறை, திரு கோணமலை மாவட்டங்களில் கன மழையால் ஆயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-6)

### சுகாதார...

புறக்கணிப்பால் டெங்கு, தட்டம்மை தடுப்பு திட்டங்களும் செயல்படுத்தப்படாமல் போயின. இந்தப் பணிப்புறக்கணிப்பால் நோயாளர்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகினர்.

மருத்துவர்களுக்கான கொடுப்பனவை 35 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுகாதார உத்தியோகத்தர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்தப் போராட்டம் இன்றும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, குழந்தைகள் மருத்துவமனை, புற்றுநோய் மருத்துவமனை, மகப்பேறு மருத்துவமனை, சிறுநீரக மருத்துவமனை, மத்திய இரத்த வங்கி மற்றும் மனநல நிறுவனம் ஆகியவற்றில் இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### போட்டியின்றி...

கூட்டத்தில் உள்வாங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. இதையடுத்து தமிழரசு கட்சியின் பொதுக்குழு கூட்டத்தை வரும் 21ஆம் திகதி நடத்துவதுடன், தேசிய மாநாட்டை 28ஆம் திகதி நடத்துவது என்ற ஏற்கனவே எடுத்த முடிவு மாற்றமின்றி பேண ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ந்து, கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன், கட்சியின் பாரம்பரியத்தை பாதுகாக்க வேண்டும். போட்டியின்றி தலைவர் தெரிவு இடம்பெறவேண்டும் என்பதை வலியுறுத்தினார். கட்சியின் செயல்குழுவும் இதனையே வலியுறுத்தியது.

கூட்டத்தில் பங்கேற்றிருந்த தலைமை பதவிக்கு போட்டியிடும் சி. சிறீதரன், ம. ஆ. சுமந்திரன், சீ. யோகேஸ்வரன் ஆகியோரிடம் இது தொடர்பில் முடிவை அறிவிக்குமாறும் அல்லது சுழற்சி முறையில் தலைமை பதவியை வகிப்பது குறித்து சிந்திக்குமாறும் செயல்குழுவினர் கூறினர்.

எனினும், இந்த விடயம் தொடர்பில் மூவரும் (போட்டியாளர்கள்) நாளைய தினம் (இன்று) பேசி முடிவெடுப்பதாக சுமந்திரன் எம். பி. தெரிவித்தார். இதனை செயல்குழுவும் ஏற்றுக் கொண்டது.

இதேவேளை, தமிழரசு கட்சியின் தலைமை பதவிக்காக போட்டியிடும் சிறீதரனை மற்றொரு போட்டியாளரான யோகேஸ்வரன் ஆதரிக்கிறார். இதனால், போட்டியிலிருந்து சுமந்திரனை விலகுமாறு இருவரும் வலியுறுத்துவர் என்றும். அதனை அவர் ஏற்றால் சிறீதரன் எம். பியிடம் கட்சியின் தலைமையை வழங்குமாறு சிபாரிசு செய்யப்படும் என்றும் அந்தத் தரப்புக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

### தென்கிழக்கு...

அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-01- 06)

### 90கிலோ...

கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நபர் சட்டநடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார் (ஐ-03)

### ஜனாதிபதி...

விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் நேற்று புதன்கிழமை கூடிய கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன மற்றும் வஜிர அபேவர்த்தன உட்பட பலர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### பருத்தித்துறையில்...

சாரதியான தேவகுமார் என்பவரே காயமடைந்தார்.

காயமடைந்தவர், நேற்று பேருந்து சேவைக்காக பேருந்து நிலையத்தில் நின்றிருந்தார். அப்போது, மோட்டார் சைக்கிளில் முகமூடி அணிந்து வந்தவர்கள் அவரை வாளால் வெட்டி விட்டு தப்பிச் சென்றனர்.

அங்கு நின்றவர்கள் உடனடியாக அவரை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அங்கிருந்து அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

பருத்தித்துறை பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-02)

### டெங்கு...

காணப்படுகின்றது.

இதேவேளை, கடந்த வருடம் அதிதீவிர தொற்று நிலையைக் கொண்டிருந்த கொழும்பில் இவ்வருடம் 284 டெங்குத் தொற்றாளர்களே இனங் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரையில் யாழ். போதனா மருத்துவமனையில் 258 பேரும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 93 பேரும். ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் 35 பேரும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 33 பேரும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 29 பேருமாக 448 டெங்கு நோயாளர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வலி.வடக்கில் 23 ஏக்கர் காணியை விடுவிக்கப் படையினர் இணக்கம்!

## மாவட்ட செயலகத்துக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 11

**யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள 23 ஏக்கர் காணிகளை விடுவிக்க உள்ளதாக இராணுவத்தினர் யாழ்.மாவட்ட செயலகத்துக்கு அறிவித்துள்ளனர்.**

வலி. வடக்கில் வறுத்தலைவிளான் பகுதியில் உள்ள 23 காணிகளையே விடுவிக்க உள்ளதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வலி. வடக்கில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் காணி முப்படைகளின் வசம் உள்ள நிலையில், அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் 23 ஏக்கர் காணிகளை விடுவிக்க இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தொழிற்சங்க நடவடிக்கையால் சுகாதாரசேவைகள் ஸ்தம்பிதம்!



கொழும்பு, ஜன. 11

அரச தாதிய உத்தியோகத்தர்கள் உட்பட பல்வேறு தொழிற்சங்கங்கள் 48 மணிநேர தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையால் பல்வேறு சுகாதார சேவைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

மருத்துவ சேவைகளுக்கு வழங்கப்படும் 35,000 ரூபாய்கொடுப்பனவை ஏனைய சேவைகளுக்கும் வழங்குமாறு கோரி நாடளாவிய ரீதியில் அரச தாதிய உத்தியோகத்தர்கள் இணைந்த சுகாதார தொழிற்சங்கங்களால் சுகயீன விடுமுறைப் போராட்டம் நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு வவுனியாவிலும் ஆதரவு வழங்கப்பட்டுள்ளது. வவுனியா பொது வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தர்கள் நேற்று புதன்கிழமை பணிக்கு சமூகமளிக்காமையினால் வைத்தியசாலையின் சேவைகள் பல ஸ்தம்பிதமடைந்தன.

குறிப்பாக பெறுமதிசேர் வரி அதிகரிக்கப்பட நிலையில் தமக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவில்லை. எனவே, அரசாங்கத்தின் அநீதியான பொருளாதார கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக போராட்டகாரர்கள் தெரிவித்தனர். (அ)

# கிழக்கில் தொடரும் மழை; மக்கள் பெரும் அவலத்தில்!



நிந்தவூர், ஜன. 11

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் தொடர்ந்து வரும் சீரற்ற கால நிலையுடனான அடைமழை தொடர்ந்த வண்ணமிருப்பதால் மக்கள் பெரும் அவலங்களுக்குள்ளாகியுள்ளனர்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடைமழையாலும், முக்கிய நீர்ப்பாசனக் குளங்களில் நீர் மட்டங்கள் அபரிமிதமாக உயர்ந்துள்ளதால், குறித்த குளங்கள், சமுத்திரங்களிலிருந்து நீர் திறந்து விடப்படுவதாலும் தாழ் நிலப்பிரதேசங்கள் பல வெள்ளப் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

இதனால் குறித்த மாவட்டங்களின் தாழ் நிலப்பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் நூற்றுக்கணக்கில் தமது வீடுகளை விட்டும் வெளியேறி உறவினர் வீடுகளிலும், முகாம்களிலும் தங்கவேண்டிய அவலமும் ஏற்பட்டுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர்களின் பணிப்பிற்கு அமைய இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களையும், பாதிக்கப்பட்ட மக்களையும் அவ்வப் பிரதேச செயலாளர்கள் நேரில் பார்வையிட்டு தகவல் திரட்டி வருவதுடன், இடம்பெயரும் நிலைக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு சமைத்த உணவு வழங்கல் உட்பட நலத்திட்ட செயற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை வெள்ளப்பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு பல பொது அமைப்புக்களும் அத்தியாவசிய உதவிகளை வழங்குவதில் ஆர்வம்காட்டி வருகின்றன. (அ-6)

# உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை; 50ஆவது ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிப்பு





யாழ்ப்பாணம், ஜன. 11

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையின் ஐம்பதாவது ஆவது ஆண்டு நினைவேந்தல் உணர்வுபூர்வமாக நேற்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றாகும்.

இந்நிலையில், யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில் தலைமையில் நேற்றுக் காலை இவ் நினைவேந்தல் நடைபெற்றது.

இதன் போது உயிர் நீத்தவர்களுக்கு அகவணக்கம் செலுத்தி பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் மதத் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், கட்சி ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலக ஆராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# குளங்களின் வான் கதவுகள் திறப்பு

முல்லைத்தீவு, ஜன. 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீண்டும் தொடர்ச்சியாக மழை பெய்து வரும் நிலையில் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றமையால் நீர் வரத்தை கருத்தில் கொண்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளமான முத்தையன்கட்டு குளத்தின் நான்கு வான் கதவுகளும் நேற்று முன்தினம் திறந்துவிடப்பட்டிருந்ததோடு, நீர் வரத்து அதிகரித்த நிலையில் நேற்று நான்கு வான் கதவுகளும் ஒரு அடி மூன்று அங்குலஅளவில் திறந்துவிடப்பட்டுள்ளன.

இதேபோன்று தண்ணி முறிப்பு குளத்தின் மூன்று வான் வான்கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன.

ஏற்கனவே குளங்கள் நிறைந்து காணப்படும் நிலையில் குளங்கள் பல வான் பாய்கின்றன. இதேவேளை நேற்றும் தொடர்ச்சியாக மழை பெய்தமையால் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி நிற்பதோடு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. (அ)

# தேர்தல் ஆணைக்குழு உறுப்பினராக பேராசிரியர் லக்ஷ்மன் திஸாநாயக்க

கொழும்பு, ஜன. 11

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராக பேராசிரியர் எஸ்.எஸ்.லக்ஷ்மன் திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கமைய தேர்தல்கள் ஆணைக்குழு பூரண அங்கத்தவர்களை கொண்டுள்ளது.

தவிசாளராக ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்கவும், உறுப்பினர்களாக எம்.ஏ.பி.சி.பெரேரா, அமீர் மொஹமட் பாஸிஸ், செல்வி அனுசூயா, சண்முகநாதன், எஸ்.எஸ். லக்ஷ் மன் திஸாநாயக்க ஆகியோர் உள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சிம்பாப்வேயுடனான ரி-20 இலங்கை அணி அறிவிப்பு



கொழும்பு, ஜன. 11

சிம்பாப்வே கிரிக்கெட் அணி இலங்கை வந்துள்ளது. இரு அணிகளும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் ரி - 20 தொடர்களில் விளையாடுகின்றன. தற்போது, ஒருநாள் தொடர் நடக்கிறது.

## மத்தியூஸூம் இடம்பிடிப்பு

இதனிடையே, இரு அணிகளுக்கும் இடையேயான ரி -20 தொடர் வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்நிலையில் இந்த ரி - 20 தொடருக்கான 16 வீரர்கள் கொண்ட இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்த அணிக்கு வனிந்து ஹசரங்க அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அஞ்சலோ மத்தியூஸ் 3 வருடங்கள் கழித்து இருபது - 20 அணிக்குத் திரும்பியுள்ளார்.

**அணி விவரம்:**

வனிந்து ஹசரங்க (அணித்தலைவர்), சரித் அசலங்கா, குசல் மெண்டிஸ், சதீர சமரவிக்ரம, குசல் பெரேரா, அஞ்சலோ மத்தியூஸ், தசூன் ஷனகா, தனஞ்சய டி சில்வா, கமிந்து மெண்டிஸ், பதும் நிசங்க, மகேஷ் தீக்ஷன, துஷ்மந் சமிரா, தில்ஷன் மதுசங்கா, மதீஷ பத்திரண, நுவன் துஷார, அகில தனஞ்சய.




# பாகிஸ்தானின் உப தலைவராக முகமது ரிஸ்வான் நியமனம்!

கொழும்பு, ஜன. 11

பாகிஸ்தான் அணியின் உப தலைவராக அந்த அணியின் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான முகமது ரிஸ்வான் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணி நியூசிலாந்துக்கு சென்று 5 போட்டிகள் கொண்ட ரி -20 தொடரில் விளையாடவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையேயான இந்த ரி-20 தொடரின் முதல் போட்டி நாளை ஒக்லாந்தில் நடைபெறுகிறது.

இந்த நிலையில், நியூசிலாந்துக்கு எதிரான ரி - 20 தொடருக்கான பாகிஸ்தான் அணியின் உபதலைவராக ரிஸ்வான் நியமிக்கப்பட்டுள்ளார்.

“ரி- 20 அணியின் உபதலைவராக நியமிக்கப்பட்டதை பெருமையாக கருதுகிறேன். எனக்கு இந்த பொறுப்பை வழங்கிய பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். பாகிஸ்தான் அணியின் தலைவர், அணியில் உள்ள அனைவருடனும் இணைந்து பணியாற்ற ஆவலாக உள்ளேன் - என்று ரிஸ்வான் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாக பாகிஸ்தான் அணியின் உப தலைவராக செயல்பட்டு வந்த ஷதாப் கான் காயம் காரணமாக நியூசிலாந்துக்கு எதிரான ரி - 20 தொடரிலிருந்து விலகியுள்ளார். (ஐ)

# டெஸ்ட் தரவரிசை பட்டியலில் கோலி, ரோஹித் முன்னேற்றம்!

டுபாய், ஜன. 11

டெஸ்ட் தரவரிசையில் இந்திய அணியின் விராட் கோலி, ரோஹித் சர்மா ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

இந்தியா-தென்னாபிரிக்கா இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என சமனில் முடிந்தது. மேலும் அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட தொடரை 3-0 என ஆஸ்திரேலியா அணி முழுமையாக கைப்பற்றியது.

இந்நிலையில் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்கள், பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியலை ஐ. சி. சி. வெளியிட்டுள்ளது.


இதில், இந்தியாவின் விராட் கோலி 6ஆவது இடத்துக்கும், ரோஹித் சர்மா 10ஆவது இடத்துக்கும் முன்னேறினர். பந்துவீச்சாளர்கள் பட்டியலில் இந்திய வீரர் பும்ரா 4ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் முதல் 10 இடங்களில் கேன் வில்லியம்சன், ஜோ ரூட், ஸ்டீவ்



ஸ்மித், மார்னஸ் லபுஷாக்னே, டெரில் மிட்செல், விராட் கோலி, ஹரி புரூக், பாபர் ஆசம், உஸ்மான் கவாஜா, ரோஹித் சர்மா ஆகியோர் உள்ளனர்.

டெஸ்ட் பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் ரவிச்சந்திரன் அஷ்வின், பட் கம்மின்ஸ், ககிசோ ரபாடா, பும்ரா, ரவீந்திர ஜடேஜா முதல் 5 இடங்களில் உள்ளனர். (ஐ)



# இந்தியாவுடனான ரி - 20 விலகினார் ரஷித் கான்!

மும்பை, ஜன. 11

இந்தியாவுக்கு எதிரான ரி -20 தொடரில் இருந்து ஆப்கானிஸ்தான் அணியின் நட்சத்திர வீரர் ரஷித் கான் விலகியுள்ளார் என்று அறிய வருகிறது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் ஆடவுள்ளது. இந்தத் தொடரின் முதல் ஆட்டம் இன்று மொகாலியில் நடைபெறுகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ஆட்டம் வரும் 14ஆம் திகதி இந்தூரிலும், 3ஆவது ஆட்டம் வரும் 17ஆம் திகதி பெங்களூரிலும் நடைபெறவுள்ளன.

இந்தத் தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணி கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது. இந்த அணிக்கு இப்ராகிம் ஜட்ரான் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். முஜீப் உர் ரஹ்மான் அணிக்கு திரும்பி உள்ளார்.

இந்நிலையில் இந்தியாவுக்கு எதிரான ரி -20 தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணியில் இடம் பெற்றிருந்த நட்சத்திர வீரர் ரஷித் கான் ரி - 20 தொடரில் இருந்து விலகியுள்ளார் என்று தகவல் வெளியாகி உள்ளது. முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் இந்தத் தொடரில் இருந்து விலகியுள்ளார். (ஐ)

# மே. இ. தீவுகளுடனான தொடர் அவுஸ்திரேலிய அணி அறிவிப்பு

மெல்பர்ன், ஜன.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 ரி -20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் எதிர்வரும் 17ஆம் திகதி தொடங்குகிறது. இந்நிலையில், மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களுக்கான அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணிகளுக்கு டிராவிஸ் ஹெட் உபதலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஒருநாள் அணியில் பட் கம் மின்ஸ், மிட்செல் ஸ்டார்க், ஜோஷ் ஹசில் வூட் ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப் பட்டுள்ளது.

**டெஸ்ட் அணி** - பட் கம்மின்ஸ் (அணித் தலைவர்), ஸ்கொட் போலந்து, அலெக்ஸ் கேரி, கமரூன் க்ரீன், ஜோஷ் ஹேசில்வுட், டிராவிஸ் ஹெட், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லபுஷாக்னே, நாதன் லயன், மிட்செல் மார்ஷ், மத்தியூ ரென்ஷா, ஸ்டீவ் ஸ்மித், மிட்செல் ஸ்டார்க்.


**ஒருநாள் அணி**

ஸ்டீவ் ஸ்மித் (அணித்தலைவர்), சீன் அப்பொட், நாதன் எல்லீஸ், கமரூன் க்ரீன், ஆரோன் ஹார்டி, டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்லிஸ், மார்னஸ் லபுஷாக்னே, க்ளென் மக்ஸ்வெல், லேன்ஸ் மோரிஸ், ஜைரிச்சர்ட்சன், மேட் ஷார்ட், அடம் ஜாம்பா.



# ஜப்பானில் ஏற்பட்ட புது வருடப் புவிநடுக்கம்: சில அவதானிப்புக்கள்

**கலாநிதி எஸ். அன்ரனி நோர்பேட்**
முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
கொழும்புப் பல்கலைக்கழகம்




யப்பான், தாய்வான் மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதியில் புவியோட்டு விருத்திக்குரிய சூழமைவில் வட அமெரிக்கா, பசுபிக், பிலிப்பைன்ஸ் கடல், யூறேஷியா போன்ற தட்டுக்கள் பெரிதும் செல்வாக்குச் செலுத்துவதைக் காணலாம். புவிநடுக்க ஆய்வாளர் சிலர் இத்தட்டுக்களின் ஓரங்களிலுள்ள பகுதிகளை ஒக்கோட்ஸ் (வட யப்பான்), ஒக்கினாவா (தென் யப்பான்), யாங்சி (கிழக்கு சீனக் கடல்), அமூர் (யப்பான் கடல்) எனப் பல நுண் தட்டுக்களாகப் (**Microplates**) பிரித்துள்ளனர். இவை யாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்க்கும் பொழுது இத்தட்டுகளுக்கு இடையில் சார்பளவிலான நகர்வுகள் (**Relative motions**) இடம் பெறுவதை அவதானிக்க முடியும்.

வட அமெரிக்கத் தட்டின் கீழாகப் பசுபிக் தட்டின் கீழிறங்கல் (**Subduction**) வருடத்துக்கு 83 - 90 மில்லி மீற்றர் என்ற வீதத்தில் நிகழ்கின்றது. தட்டுகளுக்கு இடையில் உள்ள இடைமுகம் நெடுகிலும் ஏற்படும் தட்டுகளுக்கு இடையேயான (**Interplate**) நழுவுதலின் (**slip**) காரணமாக பெருமளவு அதிர்வுகள் உருவாக்கப்ப டுகின்றன. 1958 இல் எட்ரோறோபூ (8.4), 1963 இல் குறில் (8.6), 2003 இல் றொகச்சி - ஓகி (8.3), 2011 இல் றொகே கூ (9.0) ஆகிய இடங்களில் ஏற்பட்ட புவிநடுக்கங்கள் பெரும் உதைப்புக் கொண்ட நடுக்கங்களுக்கு உதாரணமாகக் கூறப்பட்டது. 1933 சன்றிக் கூ ஓகி புவி நடுக்கம் (8.4), 1994 சிக்கூட்டன் புவிநடுக்கம் (8.3) ஆகிய இரண்டும் கற்கோளப் பகுதிகளில் ஏற்பட்ட உருமாற்றத்தின் (**Deformation**) காரணமாக தட்டுகளுக்குள்ளே (**Intraplate**) இடம்பெற்ற புவிநடுக்கங்களாகும். மேலா கச் செல்லும் வட அமெரிக்கத் தட்டின் (சிக் கோட்டன்) கீழாகப் பசுபிக் தட்டின் (சன்றிக் - கூ ஓகி) கீழிறங்கல் காரணமாகவே கற்கோளப் பாறைகளில் உருமாற்றம் நிகழ்ந்தது.





2024 சனவரி முதலாம் திகதி 7.5 றிச்டர் அளவில் ஏற்பட்ட புவிநடுக்கம் யப்பானின் மேற்குக் கரையில் ஹொன்சூ தீவின் ஆழமற்ற புவியோட்டுப் பகுதியில் இடம்பெற்ற நேர்மாறான குறையினால் (**Reverse fault**) உருவாகியது. இந்த நேர்மாறான குறை தென் மேற்கு அல்லது வட கிழக்குத் திசையில் அமைந்திருந்ததுடன் புவிநடுக்க அதிர்வின் செயல்திறன் மிக்க பகுதியாகவும் காணப்பட்டது. பசுபிக் தட்டு யப்பானின் கீழாகச் செல்வதன் காரணமாகப் பெரும்பாலான புவிநடுக்கங்கள் யாவும் யப்பானின் கிழக்கு கரையோரப் பகுதிகளிலேயே வழமையாக இடம்பெற்று வருவதை அவதானிக்கலாம். 2024 சனவரி முதலாம் திகதி இடம்பெற்ற புவிநடுக்கம் இதற்கு மாறாக யப்பானின் மேற்குப் பகுதியிலேயே இடம்பெற்றது. ஆழமற்ற முறையில் பரந்தளவான தட்டின் நகர்வினால் உருவாக்கப்பட்ட மேலோட்டின் உருமாற்றத்தினால் இந்நடுக்கம் ஏற்பட்டது.

புவிநடுக்கங்களைப் பொறுத்தவரை அவை ஏற்படும் ஆழத்தை பொறுத்து மூன்று வகைப்படும். ஒன்று ஆழமான புவி நடுக்கங்கள். மற்றது நடுத்தரப் புவி நடுக்கங்கள். மூன்றாவது வகையாகக் காணப்படும் ஆழமற்ற புவிநடுக்கங்களே (**shallow earthquakes**) அதிகளவான சேதங்களை ஏற்படுத்தக் கூடியவை. புவி மேற்பரப்புக்கு அண்மையாக இடம்பெறும் ஆழமற்ற புவிநடுக்க நிகழ்வுகளின் சக்தி வெளிவிடப்படும் பொழுது மிகக் கடுமையான அதிர்வுகளை அவை ஏற்படுத்தும். கரையோரத்தில் இந்தப் புவிநடுக்கம் ஏற்பட்டதினால் அதன் ஒரு பக்கமாக இருந்த நிலப் பகுதிகளில் சுனாமியின் தாக்கம் குறைவாகவே ஏற்பட்டது.

யப்பானின் நோட்டோ குடாநாட்டில் (**Noto Peninsula**) 2024 சனவரி முதலாம் திகதி இருபதுக்கும் அதிகமான மிகச் சக்தி வாய்ந்த புவிநடுக்கங்கள் ஏற்பட்டன. அதில் ஒன்று 7.5 றிச்டர் பருமனைக் கொண்டதாக இருந்தது என வளிமண்டலவியல் நிறுவனம் அறிவித்தது. இதுவரை 84 பேர் இறந்தும் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் மின்சாரம் இன்றியும் அல்லது அவர்களது வீடுகளை விட்டும் வெளியேற்றப்பட்டு உள்ளனர். ஒரு லட்சம் மக்களை இடம் பெயரும்படி அறிவுறுத்தப்பட்டதாகவும் அறிய முடிகின்றது.

2011 இல் ஏற்பட்ட 9.0 பருமன் கொண்ட சென்டாய் புவி நடுக்கத்தினால் சுனாமி உருவாகியது. ஏறக்குறைய 18,000 பேர் வரை இறந்தனர். புக்குசியாமா மின்நிலையம் பாதிக்கப்பட்டது. புவிநடுக்க மேன்மையத்திலிருந்து தூண்டப்பட்ட பெரும் திணிவிலான சுனாமி யப்பானின் வட கிழக்கு கரையினைத் தாக்கி அழித்து விட்டது. சுனாமி அலைகள் இசினோ மக்கி என்னுமிடத்தில் 32 அடிக்கு உயர்ந்து காணப்பட்டது. சென்டாய் விமான நிலையத்தினை வழமைக்குக் கொண்டுவர ஏறக்குறைய ஒரு மாதம் வரை சென்றது. அத்துடன் நட்டோரி துறை முகத்துக்கு அண்மித்த பகுதிகள் சுனாமியின் காரணமாக 132 அடிக்கு உயர்ந்த அலைகளினால் வெள்ளம் நிரம்பி வழிந்தமை குறிப்பிடத்தக்கது.

புக்குசிமா டைசி மின்சக்தி நிலையத்தில் அலைகள் 46 அடிக்கு உயர்ந்ததுடன் வெள்ளத்தினால் மூடப்பட்டது. மின் பிறப்பாக்கிகளின் இயக்கம் நிறுத்தப்பட்டது. சனவரி முதலாம் திகதி ஏற்பட்ட புவிநடுக்கத்தின் பின்னர் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டதன் பின்னர் சுசூ நகரத்தின் (**Suzu city**) சில பகுதிகளில் 4 அடி உயரத்துக்கு சிறிய அலையொன்று தாக்கி கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள படகுகளையும் மூழ்கடித்தது.

புவியோட்டு விருத்திக்குரிய நான்கு தட்டுக்களின் மேல் அமைவிடத்தினைக் கொண்டிருக்கும் யப்பான் உலகப் புவி நடுக்கங்களில் ஏறக்குறைய **18%** அனுபவத்தைக் கொண்டிருக்கின்றது என வாஷிங்டன் போஸ்ட் குறிப்பிட்டுள்ளது. 2024 புவிநடுக்கத்தின் மேன்மையம் சுசூவுக்கு அண்மையிலேயே காணப்பட்டதுடன் சில பகுதிகளில் நிலம் 13 அடிக்கு உயரந்தும் உள்ளது. இதற்கு மாறாக 2011 இல் ஏற்பட்ட புவிநடுக்கம் கடலுக்குள் ஏற்பட்டதனால் பாரிய விசையுடன் கூடிய சுனாமி மணிக்கு 500 மைல் வேகத்தில் கரையை வந்து தாக்கியது. இச்சுனாமி அலையின் தாக்கத்தினால் புக்குசிமா அணுமின் நிலையத்துக்குப் பெரும் அழிவு ஏற்பட்டது. இந்நிகழ்வுகளினால் யப்பானின் அணுமின் கைத்தொழிலுக்குப் பெரும் எதிர்ப்பு பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து வந்த நிலையில் இப்புவிநடுக்கம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. யப்பானின் மேற்குக் கரையில் ஏற்பட்ட இப்புவிநடுக்கம் பெருமளவிலான அதிர்வினைக் கொண்டிருந்தது. சுனாமி மற்றும் தீ பரவலுடன் பன்மடங்கான பின்னதிர்வுகளையும் உருவாக்கியது. வஜிமாவில் (**Wajima**) கட்டடங்கள் தீயினால் பாதிக்கப்பட்டன. இஸ்சிகாவா (**Ishikawa**) பெருநிலப் பகுதியினைத் தாக்கிய இப்புவிநடுக்கம் யப்பானின் மேற்கு கரையில் நேட்டோ குடாநாட்டில் ஒரு நூற்றாண்டுக்கும் கூடுதலான காலப் பகுதிக்குப் பின்னர் இடம்பெற்ற ஒரு பாரிய புவிநடுக்கமாகும் என கியாத்தோ பல்கலைக்கழகப் புவி நடுக்க விஞ்ஞானி ஒருவர் குறிப்பிட்டிருந்தார். இப் புவி நடுக்கம் ஏற்பட்டதன் பின்னர் தொடர்ந்து 146 சிறியளவான அதிர்வுகள் இஸ்சிகாவாவின் நோட்டோ குடாநாட்டில் உணரப்பட்டது. அவற்றுள் ஒரு அதிர்வு 6.2 அளவினை கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இப்பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட பின்னதிர்வுகள் தொடர்ந்தும் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

யப்பான் உலகின் மிக முக்கியமான புவிநடுக்க நிகழ்வுகளைக் கொண்ட ஒரு நாடு. புவியோட்டு விருத்திக்குரிய நான்கு ஒருங்கல் தட்டுக்களின் மேல் அமைந்துள்ளதுடன் அவற்றினால் ஏற்படும் தொடர்ச்சியான நெருக்குதல்களுக்கும் உட்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வருட மும் 1500 நடுக்கங்கள் யப்பானில் ஏற்படுகின்றன. இவற்றுள் பெரும்பாலானவை பசுபிக் தட்டுப் பகுதியின் கிழக்கு கரையில் இடம் பெறுகின்றன. அத்தட்டு இன்னொரு தட்டின் கீழாகக் கீழிறங்கலாக நழுவிச் செல்கின்றது. இப்புவிநடுக்கம் நோட்டோ குடாநாட்டின் கீழாக 150 கிலோ மீற்றர் நீளமான குறைப் பகுதியில் தோற்றம் பெற்றது. இதன் மூலப்பகுதி அகன்றதாகவும் பாரிய முறிவுக ளைக் கொண்ட எதிர்மாறு குறையைக் கொண்ட ஒரு பகுதியாகவும் அமைந்துள்ளது. தட்டின் உட்பகுதிகளில் பன்மடங்கு குறை முறிவுகள் இருந்ததினால் தான் பாரிய புவிநடுக்கத்தின் பின்னர் பின்னதிர்வுகள் தூண்டப்பட் டன எனச் சந்தேகிக்க முடிகிறது என விஞ்ஞானிகள் குறிப்பிட்டனர்.

டோக்கியோ பல்கலைக்கழகப் புவியதிர்வு விஞ்ஞானியான 'அயிட்டாரோ காட்டோ' என்பவரின் கருத்துப்படி பாய்பொருட்கள் (**fluids**) புவியோட்டின் உள்ளே ஆழமான பகுதிகளில் குறிப்பாக இசிக்காவாவில் புவிந டுக்கத்தை தூண்டியிருக்கலாம். இப் பாய்பொருள் புவி யோட்டின் ஊடாக மேல் நோக்கி நகரும் போது அவை குறை வலயத்தைப் பலவீனமாக்கி அவற்றினை நழுவச் செய்வதனால் பிரதான புவிநடுக்கத்தின் பின்னர் தொடர்ச் சியான பின்னதிர்வுகளை ஏற்படுத்தக் காரணமாக இருந் தது. 2011 இல் ஏற்பட்ட மோசமான புவிநடுக்க நிகழ் வின் பின்னர் யப்பானில் புவிநடுக்க முன்னெச்சரிக்கை முறைமைகள் மேம்படுத்தப்பட்டு வந்துள்ளன. இதனால் 7.5 அளவில் ஏற்பட்ட புவிநடுக்கத்தின் பின்னர் உடனடி யாகவே சுனாமி எச்சரிக்கையை வழங்கி உயர்வான நிலைப் பகுதிகளை நோக்கி நகருமாறு குடியிருப்பாளர் களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. ஆனால் அதிக ளவில் ஏற்பட்ட பின்னதிர்வுகள் காரணமாக மக்களை மீட்கும் வாய்ப்பு மீட்புக் குழுவுக்கு கடினமான ஒரு செயற்பாடாக மாறியது. சேதமடைந்து விழுந்து கிடந்த கட்டட இடிபாடுகளில் சிக்கிய மக்களை மீட்பது கடி னமாகியது. எதிர்வரும் நாட்களில் பின்னதிர்வுகள் குறையும் என எதிர்பார்க்கப்பட்டாலும் இன்னொரு புவிநடுக் கம் 6 க்கும் 7 க்கும் இடையில் ஏற்படக் கூடும் என எதிர் பார்ப்பதாகவும் அதற்கு மக்கள் தயாராக இருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

உலக எரிமலைகளின் பரம்பலில் 75 வீதம் பசிபிக்கைச் சுற்றிக் காணப்படுகின்றது. அவற்றுள் பெரும்பாலானவை நீருக்கடியில் அமைந்துள்ளன. யப்பான் நாடு இப் பசிபிக் சமுத்திரத்திலுள்ள நெருப்பு வளையத்தில் (**Ring of fire**) அமைந்துள்ளது. இப்பகுதியில் பெரும் எண்ணிக்கையிலான எரிமலைகளும் புவிநடுக்கங்களும் இடம்பெறுகின்றன. இதன் நீளம் 40,000 கிலோ மீற்றர்களாகும். கடந்த ஒரு வருடத்தில் மட்டும் யப்பானில் பல்வேறு அளவுத் திட்டங்களில் 621 புவி நடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே தான் புவிநடுக்கங்களையும் சுனாமிகளையும் எதிர்கொள்ளும் அனர்த்த இடர்மிக்க நாடாக யப்பான் இருந்து வருகின்றது. ●

# நியாயப்பாடு இல்லாத அரசாங்கத்தின் புதிய சட்டங்களுக்கு பெருமளவு கருத்தொருமிப்பு தேவை



கலாநிதி.ஜெகான் பெரேரா

பொருளாதார, நல்லிணக்க மற்றும் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் சட்டங்களைக் கொண்டுவருவதில் அரசாங்கம் வெகு துரிதமான செயலில் இறங்கியிருக்கிறது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இருப்பதால் அதைச் செய்யக்கூடியதாக இருக்கிறது. 2020 ஆம் ஆண்டில் வென்றெடுத்த பாராளுமன்ற பெரும்பான்மையின் விளைவாக அரசாங்கம் அதன் விருப்பத்தின்படி செயற்படமுடிகிறது.

ஆனால், முன்னைய அரசாங்கத்தின் தவறான கொள்கைகளின் விளைவாக 2021 ஆம் ஆண்டில் பொருளாதாரம் படுமோசமான வீழ்ச்சியைக் கண்டபிறகு நாட்டை ஆட்சிசெய்வதற்கான அரசாங்கத்துக்கு இருக்கும் நியாயப்பாடும் தார்மீக உரிமையும் கேள்விக்குள்ளாகி வந்திருக்கின்றன. முன்னைய அரசாங்கத்தின் தலைவர்கள் பதவிகளை துறந்து நாட்டை விட்டு வெளியேறவேண்டியேற்பட்டது.

இரண்டாவது உலகப்போர்க் காலத்தில் சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் பாப்பரசரிடம் எத்தனை படைப்பிரிவுகள் இருக்கின்றன என்று கேட்டதாக கூறப்பட்டது. தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் அதிகாரம் என்பது அதன் சட்டரீதியான வல்லமையில் தங்கியிருக்கிறதே தவிர தார்மீக அதிகாரத்தில் அல்ல. அதுவே யதார்த்தமாகும். பேனையை விடவும் வாள் வலிமையானது என்பதே தற்போது உலகளாவிய போக்காக இருக்கிறது.

இந்த நாட்களில் தார்மீக நெறியும் அதிகாரமும் எதிரெதிராக நிற்கின்றன. தார்மீக நெறி பொது நன்மையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கின்ற அதே வேளை, அதிகாரம் சுயநலனை அடிப்படையில் அமைந்திருக்கிறது. தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் வரை அரசாங்கத்தின் சட்டரீதியான அதிகாரம் சவாலுக்கு உட்படுத்த முடியாததாக தொடரும்.

அரசின் வன்மையான பிரிவுகளை பலப்படுத்தும் வகையிலான சட்டங்களும் அரசாங்கம் பாராளுமன்றத்தின் ஊடாக அவசர அவசரமாக கொண்டுவருகின்ற புதிய சட்டங்களில் அடங்குகின்றன. இவற்றின் பட்டியலில் முதன்மையானதாக பயங்கவாத எதிர்ப்புச் சட்டமூலம் இருக்கிறது. அது பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக முன்னெடுக்கப்படும் வேலைநிறுத்தங்கள் மற்றும் ஊடக சுதந்திரம் உட்பட பெருவாரியான நடவடிக்கைகளை பயங்கரவாதம் என்ற புலத்திற்குள் கொண்டுவருகிறது.

இணையவெளி பாதுகாப்பு சட்டமூலம் போன்ற அடக்குமுறைச் சட்டங்களும் கொண்டுவரப்படுகின்றன. அது சமூக ஊடகங்களின் பாதிப்புகளில் இருந்து சிறுவர்களையும் பெண்களையும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டது என்று அரசாங்கத் தலைவர்கள் நியாயப்படுத்துகின்றனர். ஆனால் உண்மையில் கருத்துவெளிப்பாட்டு சுதந்திரம் மற்றும் சமூக ஊடக பதிவுகள் மீது தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டு எதிர்வரும் நாட்களில் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்படும் இன்னொரு புதிய சட்டம் உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பானதாகும். நல்லிணக்கத்தை மேம்படுத்துவதே இந்த ஆணைக்குழுவின் நோக்கமாகும்.

நல்லிணக்கம் என்று வரும்போது எதிரணி அரசியல் கட்சிகளின் குறிப்பாக இன,மத சிறுபான்மை கட்சிகளின் பங்கேற்பு மிகவும் முக்கியமானதாகும். அல்லாவிட்டால் அது ஒரு கை ஓசை போன்றதேயாகும்.

முன்னைய ஆணைக்குழுக்கள், கமிட்டிகளின் அறிக்கைகளை ஆராய்வதற்கு நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு அதன் அறிக்கையைக் கையளிப்பதற்கு முன்னதாகவே உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டவரைவு தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருப்பது விசனத்துக்குரியதாகும்.

### குறைந்தளவு கலந்தாலோசனைகள்

கடந்த வருடம் பெப்ரவரியில் வெளியிடப்பட்ட நவாஸ் ஆணைக்குழுவின் இடைக்கால சுருக்க அறிக்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று பற்றி குறிப்பிடப்பட்டிருந்ததுடன் நாளடைவில் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும்போது அந்த ஆணைக்குழுவின் தோற்ற அமைப்பு குறித்து விதப்புரை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நவாஸ் ஆணைக்குழுவின் ஆணைக்குழு அதன் அறிக்கையை கையளிக்கும் வரை காத்திராமலும் எதிரணி கட்சிகளுடனும் சிவில் சமூகத்துடனும் மிகவும் குறைந்தளவு கலந்தாலோசனைகளுடனும் உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டத்தை கொண்டுவருவதில் அரசாங்கம் காட்டும் அவசரம் நல்லிணக்கத்துக்கு அப்பால் வேறு ஏதோ நோக்கம் இருக்கிறது என்ற சந்தேகத்தைக் கிளப்புகிறது.

பாதிக்கப்பட்ட இன, மத சிறுபான்மை இனத்தவர்களின் ஆதரவு இல்லாவிட்டாலும் கூட அந்த ஆணைக்குழுச் சட்டத்தைக் கொண்டுவருவதன் மூலமாக சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறும் ஆர்வம் அரசாங்கத்துக்கு இருக்கிறது போன்று தெரிகிறது.

> **புதிய நல்லிணக்க நிறுவனங்கள் கருத்தொருமிப்பின் அடிப்படையில் அல்லாமல் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குப்பலத்தில் அமைக்கப்படுமாக இருந்தால் எந்தப் பயனையும் தராமல் இறுதியில் அரசாங்கத்துக்கு பெரும் சுமையாகப் போய்விடும் என்பதுடன் நல்லிணக்கச் செயன்முறைகள் மீதான நம்பிக்கையையும் அருகச்செய்துவிடும்.**

தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க அலுவலக சட்டமூலத்தை இவ்வாறு பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்து நிறைவேற்றவிருக்கிறது. அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் சகல நல்லிணக்க செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்பதில் ஒரு பாத்திரத்தை வகிப்பதற்கு தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் ஒன்றை அமைப்பதே சட்டமூலத்தின் நோக்கமாகும்.

தேசிய ஐக்கியத்தையும் சமாதான சகவாழ்வையும் மேம்படுத்துதல் போன்ற மெச்சத்தக்க குறிக்கோள்கள் அந்த அலுவலக சட்டமூலத்தில் இருக்கின்றன. அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கையில் உள்ள பல்வேறு சிவில் சமூகத்தினதும் அரசியல் சமூகத்தினதும் பிரதிநிதிகள் மத்தியில் கலந்துரையாடல் அவசியம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு விடயத்தில் அதன் உள்ளடக்கம் தொடர்பில் பொதுக் கலந்தாலோசனைகளை நடத்துவதற்கோ அல்லது மக்களுக்கு அறிவூட்டுவதற்கோ எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.

தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலக சட்டத்தில் கையாளப்படவேண்டிய பிரச்சினைக்குரிய மூன்று முக்கிய விவகாரங்கள் இருக்கின்றன. அந்த அலுவலகம் எந்த அமைச்சரின் நிருவாகத்தில் வருகிறதோ அவரே அதன் சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பார்.

மூன்று வருட பதவிக்காலத்தைக் 11 உறுப்பினர்களை நியமிப்பதற்கு பெயர்களை சிபாரசு செய்யும் அதிகாரம் அமைச்சருக்கு இருக்கின்ற அதேவேளை சபையின் தலைவருக்கு பதவிக்கால மட்டுப்பாடு இல்லை. இது உகந்தது அல்ல. இன, மத குழுக்களினதும் சமூக - கலாசார நலன்களினதும் பல்கைமையை பிரதிநிதித்துவப் படுத்தக்கூடியதாக உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு பெருமளவுக்கு பல்தரப்பு அடிப்படையிலான நியமன வழிமுறையொன்று கடைப்பிடிக்கப்படவேண்டியது அவசியமாகும்.

இந்த உறுப்பினர்களை அரசியலமைப்பு பேரவை நியமிப்பதற்கு வகைசெய்யுமுகமாக பாராளுமன்ற விவாதத்தின்போது குழுநிலையில் திருத்தங்களை பிரேரணை கொண்டவரப்படும் என்று கூறப்படுகிறது. அது வரவேற்கத்தக்கதாகும்.

### வெள்ளை யானைகள்

சுயாதீனமான சகல நல்லிணக்கப் பொறிமுறைகளையும் ஒன்றாகக் கொண்டுவரும் தேசிய நல்லிணக்கச் செயன்முறையில் மேற்படி அலுவலகம் முதன்மையான பாத்திரத்தை வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் அலுவலகத்தின் சபை உறுப்பினர் நியமனங்களில் காணாமல்போனோர் விவகார அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம், அரசாங்க சார்பற்ற தன்னார்வ நிறுவனங்கள் செயலகம், விரைவில் நியமிக்கப்படவிருக்கும் உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் பதவிவழி உறுப்பினர்களாக இருக்கக்கூடியதாக இடம்பெறவேண்டியது அவசியமாகும்.

அவ்வாறு செய்வதன் மூலமாக சகல நல்லிணக்க நிறுவனங்களும் பொதுவான ஒரு நோக்கைக் கொண்டிருப்பதையும் ஒன்றுக்கொன்று அவற்றின் பணிகளை பரஸ்பரம் அறிவித்துக் கொள்வதையும் உறுதிசெய்து கொள்ளக்கூடியதாக இருக்கும். அதேவேளை பாதிக்கப்பட்ட நபர்களினதும் சமூகங்களினதும் கருத்துக்களை கேட்டறிந்து அவை தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக சிவில் சமூக பிரதிநிதித்துவத்தையும் உறுதிசெய்யவேண்டும்.

சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் உட்பட உள்நாட்டு அமைப்புக்களினால் முன்னெடுக்கப்படும் சமாதான மற்றும் நல்லிணக்கச் செயற்திட்டங்களுக்கு அனுசரணையாக செயற்பட்டு வழிகாட்டுவதற்கு தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க அலுவலகத்துக்கு வழங்கப்படும் அதிகாரம் சிவில் சமூகத்தின் விடயத்தில் குறிப்பிட்ட வரையறைக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும்.

சிவில் சமூகத்தின் பணிகளைக் கண்காணிப்பதற்கும் மீளாய்வு செய்வதற்கும் அலுவலகத்திற்கு இருக்கும் அதிகாரம் தேசிய நல்லிணக்கக் கொள்கைகளும் செயற்பாடுகளும் குறுகிய, பக்கச்சார்பான நோக்கங்களுக்காக அரசியல்மயப்படுத்தப்படக்கூடிய சாத்தியம் இருப்பதால் அரசாங்கம் கடும்போக்குடன் நடந்துகொள்ளக்கூடும் என்ற கவலையை ஏற்படுத்துகிறது.

அரசாங்கம் அதன் வழிகாட்டல்களை சிவில் சமூகம் பின்பற்றவேண்டும் என்று அறிவுறுத்தாமல் உதவியாகவும் அனுசரணையாகவும் செயற்படக்கூடியதாக புதிய சட்டத்தில் தெளிவுபடுத்தவேண்டும்.தேசிய நல்லிணக்கத்தை உயர்மட்டத்தில் இருந்து கீழ்நோக்கி திணிக்கமுடியாது.சகல இன,மத சமூகங்களையும் ஈடுபடுத்தும் சுயவிருப்பிலான ஒரு செயன்முறையாக அது இருக்க வேண்டியது அவசியம்.

நல்லிணக்கம் தொடர்பிலான புதிய நிறுவனங்கள் பற்றிய கலந்துரையாடல்களில் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகளையும் ஈடுபடுத்தவேண்டிய தேவை இருக்கிறது.

புதிய சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முன்னதாக எதிரணி அரசியல் கட்சிகளுடன் குறிப்பாக இன,மத சிறுபான்மைச் சமூகங்களை பிரதிநிதித்தவப்படுத்தும் கட்சிகளுடனும் சிவில் சமூகத்துடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டியது அவசியம்.

தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க அலுவலகத்தை அமைக்கும் தேசிய ஐக்கியத்துக்கான உண்மையான ஒரு நல்லிணக்கப் பாதையாக மாற்றுவதற்கு பன்முகப்பண்புகளையும் அரவணைக்கும் பல்தரப்பு கருத்தொருமிப்பைக் காண்பதற்கு அத்தகைய பேச்சுவார்த்தைகள் அவசியம்.

புதிய நல்லிணக்க நிறுவனங்கள் கருத்தொருமிப்பின் அடிப்படையில் அமையாமல் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குப்பலத்தில் அமைக்கப்படுமாக இருந்தால் அவை எந்தப் பயனையும் தராமல் அரசாங்கத்துக்கு பெரும் சுமையாகவே இறுதியில் அமையும். நல்லிணக்கச் செயன்முறைகள் மீதான நம்பிக்கையையும் அருகச்செய்துவிடும்.

# டெங்கினால் பாதிக்கப்பட்டால் வீடுகளில் சிகிச்சை பெறுவதை தவிர்த்து வைத்தியசாலை செல்லுங்கள்!

## மன்னார் அரச அதிபர் வேண்டுகோள்

மன்னார், ஜன. 11

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்படும் சந்தர்ப்பத்தில் வீடுகளில் இருந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளுவதை தவிர்த்துக் கொண்டு வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்று தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் உயிராபத்துகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோய் நிலவரம் தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், சுகாதார துறையினர்,பொலிஸார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது மன்னார் மாவட்டத்தில் டெங்கு நிலைமை கட்டுப்பாட்டில் காணப்படுகின்றது. எனினும் மாவட்டத்தில் டெங்கு நிலவரம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி வருகிறோம்.

கடந்த டிசெம்பர் மாதம் மற்றும் ஜனவரி மாதத்தை ஏனைய மாதங்களுடன் ஒப்பிடும் போது மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. கூடுதல் அவதானம் செலுத்தும் வகையில் வீடு வீடாக சென்று பார்வையிட்டு டெங்கு நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் சிரமதான பணிகளை முன்னெடுத்து வருகிறோம். தொடர்ந்தும் சில தினங்களுக்கு மழை பெய்யும் என்பதால் விசேட கவனம் செலுத்தி வருகிறோம். டெங்கு தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சுகாதார துறையினருடன் பொலிஸ், ராணுவம், கிராம அலுவலர்கள் இணைந்து டெங்கு தொடர்பாக விசேட பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ச்சியாக மருத்துவப் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு உற்படுத்தப்பட வேண்டும் என பொதுமக்களுக்கு அவசர அறிவித்தல் விடுக்கின்றோம்.

எனவே டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டால் வீடுகளில் இருந்து சிகிச்சை பெற்றுக் கொள்வதை தவிர்த்து வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். இதனால் டெங்கு நோயினால் ஏற்படும் உயிராபத்துக்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.

இந்த நிலையிலே மாவட்டத்தில் டெங்கு நிலைமை மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்து ஆராயும் வகையில் குறித்த கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது -என்றார்.

(அ)

## வெள்ளத்தில் மூழ்கிய ரயில் நிலையம்

மட்டக்களப்பு, ஜன. 11

நாட்டில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக, மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பிரதேச செயலாளர் பிரிவுகளின் தாழ் நில பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அத்தோடு மட்டக்களப்பு ரயில் நிலையமும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

மேலும் ரயில் பயணங்களை மேற்கொள்ளும் பயணிகள் சிரமத்திற்குள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



(அ)

## கைதாகி விடுதலையான மத தலைவரின் நிகழ்வில் கலந்துகொண்ட சிறை அதிகாரி!

கொழும்பு, ஜன. 11

மதங்களுக்கு அவமரியாதை தரும் வகையில் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட மதத் தலைவர் ஒருவர் கொழும்பில் நடத்திய நிகழ்வொன்றில் கலந்துகொண்ட சிறைச்சாலை அதிகாரியிடம் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவின் உத்தரவின்பேரில் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றுள்ளது.

குறித்த சிறைச்சாலை அதிகாரி இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை தொடர்பில் நீதி அமைச்சருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்நிலையில் இந்த சம்பவம் தொடர்பில் அவர் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமாக துஷார உபுல்தெனியவிடம் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

இதனையடுத்து குறித்த சிறைச்சாலை அதிகாரியிடம் துஷார உபுல்தெனிய விசாரணை நடத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (அ)

